விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்
Thamil Naatham

இராகம் 01 | தாளம் 95 | வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 14 செவ்வாய்க்கிழமை (30.10.2012) | பக்கங்கள்: பதினாறு

டெங்கு ஒழிப்புப் பணியில்



அணி திரள்வோம்

# கடும் மழை, புயல், வெள்ளம்!

## முல்லைத்தீவில் 4000 பேர் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் அடைமழை பெய்து வருகின்றது. இடி, மின்னல், சூழல் காற்றுடன் தொடர் மழையால் வடக்கு, கிழக்கு, வடமேல் மாகாணங்களிலும் தெற்கு மற்றும் மலையக பிரதேசங்களிலும் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வடகிழக்கே முல்லைத்தீவிலிருந்து சுமார் 250 கிலோமீற்றர் தொலைவில் நிலைகொண்டுள்ள தாழமுக்கம் காரணமாகவே காலநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. அத்துடன் இந்தக் காலநிலை மாற்றத்தினால் தொடர் மழை மற்றும் இடி, மின்னல், காற்று ஆகியவற்றின் தாக்கம் இருக்கும் எனவும் கடற்றொழிலாளர்கள் அவதானத்துடன் இருக்குமாறும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தொடர் மழையினால் வெள்ளம், மண்சரிவு, ஆறுகள் பெருக்கெடுத்தல் போன்ற அனர்த்தங்கள் குறித்து விழிப்புடன் இருக்குமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாக யாழ்.குடாநாடு மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய பிரதேசங்களில் மக்கள் அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளது. வீதிகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் வீடுகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளது. குளங்கள், நீர்த்தேக்கங்கள் நிறைந்து காட்சியளிக்கின்றன. வீதிகள் சில தடைப்பட்டுள்ளன.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாக்கத்தையடுத்து, முல்லைத்தீவு மாவட்டத்தில் காற்றுடன் கூடிய மழை பெய்து வருகின்றது. காற்று மழையுடன் கூடிய சீரற்ற காலை நிலை காரணமாக வடக்கு மற்றும் ஏனைய பகுதி மீனவர்கள் கடலுக்குத் தொழிலுக்குச் செல்லவில்லை.

தாழமுக்கம் காரணமாக கடலிலும் காற்றுவீசும்

02



கரவெட்டி, தாமரைக்குளப் பகுதியில் அடை மழையினாலும், கடும் காற்றினாலும் மக்களின் இயல்புநிலை பாதிப்படைந்துள்ளது. நேற்றுமுன்தினம் வீசிய கடும் காற்றினால் பனை மரம் முறிந்து வீதியின் குறுக்கே வீழ்ந்து கிடப்பதைக் காணலாம்.

## கடலுக்கு செல்ல வேண்டாம் மீனவர்களுக்கு எச்சரிக்கை!

(கொழும்பு)

மீனவர்கள் கடலுக்குச்செல்ல வேண்டாமென வானிலை அவதான நிலையமும் [..]வட்ட கடற்றொழில் திணைக்களமும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டிருந்த தாழமுக்கம் முல்லலைத்தீவு கடற்பரப்பில் கிழக்குப் பகுதியில் 200 கிலோமீற்றர் தொலைவில் நிலைகொண்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய

02

## புலிகள் மீதான தடை வழக்கு: இறுதி விசாரணை நவ.03 இல்

(சென்னை)

புலிகள் இயக்கத்துக்கு தடை விதிப்பது தொடர்பான சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு தீர்பாயத்தின் விசாரணை மதுரையில் நேற்று நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தடைவிதிப்பது தொடர்பாக இந்த தீர்ப்பாயம் பல்வேறு இடங்களிலும் விசாரணை நடத்தி வருகிறது. ம.தி.மு.க. சார்பில் புலிகள் இயக்கத்துக்கு தடை விதிக்கக் கூடாது என இந்தத் தீர்ப்பாயத்தில் மனு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், திண்டுக்கல்

02

## கல்வித் தகைமை அடிப்படையில் அவுஸ்திரேலியாவில் குடியுரிமை

(சிட்னி)

கல்வித் தகமை அடிப்படையில் இலங்கையர்களுக்கு குடியுரிமை வழங்குவதற்கு அவுஸ்திரேலியா திட்டமிட்டுள்ளது. சிறந்த கல்விப் பின்புலம் மற்றும் தொழில்சார் தகமைகளை உடையவர்களுக்கு அவுஸ்திரேலியாவில் குடியுரிமை வழங்கப்பட உள்ளது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆசிய பிராந்திய வலய நாடுகளுடன் மிக நெருங்கிய பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ள

02

## இலங்கையில் தினமும் 40-50 பேர் பாரிசவாதத்தால் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் நாளொன்றுக்கு 40-50 பேரளவில் பாரிசவாதம் காரணமாக உயிரிழப்பதாக சுகாதார அமைச்சு அறிவித்தது. உலக பாரிசவாத தினம் நேற்றாகும். இத்தினத்தையொட்டி சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேற்படி தகவல் குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், கொழும்பு மாநகரில் நூறு பேருக்கு ஒருவர் பாரிசவாதத்திற்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிய வருகின்றது. இந்நாட்டில்

02

## பாணின் விலை 2 ரூபாவினால் அதிகரிப்பு

(கொழும்பு)

பாண் ஒரு இறாத்தலின் விலை இரண்டு ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ் விலை அதிகரிப்பு நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருகிறது.

தற்போது 58 ரூபாவாக இருக்கும் 450கிராம் எடையுடைய பாண் ஒரு இறாத்தலின் விலை நள்ளிரவு முதல் 60 ரூபாவாக அதிகரிக்கப்படுகிறது.

கோதுமை மாவின் விலையேற்றத்தைத் தொடர்ந்து பாணின் விலை உள்ளடங்கலாக அனைத்து பேக்கரி உணவு உற்பத்திகளின் விலையும் அதிகரிப்பது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அகில

02

## பிரதம நீதியரசர் நீதிமன்ற அதிகாரத்தை உறுதிசெய்வார்

### அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா

(கொழும்பு)

பிரதமர் நீதியரசர் சிரானி பண்டாரநாயக்க நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை உறுதி செய்வார் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிரானி பண்டாரநாயக்க, சாதாரண

02

## இந்திய தேசத்தின் இறைமைக்கு புலிகளால் தொடர்ந்தும் அச்சுறுத்தல்!

### நீதிமன்றத்தில் இந்திய அரசு தரப்பு சட்டத்தரணிகள் குழு

(சென்னை)

விடுதலைப்புலி உறுப்பினர்களிடமிருந்து வெடிபொருட்கள் மீட்கப்பட்டதாக தமிழக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை நீடிப்பு தொடர்பான வழக்கு விசாரணைகளின் போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்று விடுதலைப் புலி உறுப்பினர்களிடம் வெடிபொருட்களும் ஆயுதங்களும் மீட்கப்பட்டதாக

02

தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்

# கூடங்குளம் அணுமின் நிலையத்தை கண்காணிக்க அனுமதி வேண்டும்

## இலங்கை கோரிக்கை

தமிழகத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கூடங்குளம் அணுமின்னுற்பத்தி நிலையத்தை நேரடியாக கண்காணிக்க அனுமதிக்க வேண்டும் என்று இலங்கை கோரியுள்ளது.

வெளியுறவுகள் துறை அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

ஏற்கனவே கூடங்குளம் அணுமின்னிலையத்தினால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய அபாயங்கள் குறித்து, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருந்தன.

இந்த நிலையில் தற்போது அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளது. இதற்கான இராஜதந்திர முன்னெடுப்புகளை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை இந்தியாவின், கூடங்குளம் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் அணு உலையை உடனடியாக நிறுத்துமாறு கோரி மக்கள் போராட்ட இயக்கம் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இந்தியாவின் தென் பிராந்தியத்தில் அமைக்கப்பட்டுவரும் இந்த அணு உலையில் வெடிப்புக்களோ, கசிவோ ஏற்படும் பட்சத்தில் அதன் கதிர் வீச்சினால் இலங்கைக்கும் பாரிய ஆபத்து ஏற்பட வாய்ப்புக்கள் இருப்பதனால் அதை தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தியே இந்த துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

இந்தியாவின் அணு உலையில் விபத்து ஏற்பட்டால் வடமாகாணம் முழுமையாகவும், புத்தளம், திருகோணமலை போன்ற மாவட்டங்களுடன் வேறு சில மாவட்டங்களும் பாதிப்படையும்.

அத்துடன், திடீர் மரணங்கள் உட்பட புற்றுநோய் மற்றும் உயிர்க்கொல்லி நோய்களையும் உருவாக்குவதுடன் எதிர்காலத்தில் பிறக்கும் குழந்தைகளும் அங்கவீனர்களாக பிறக்கும் சாத்தியங்கள் அதிகமாக உருவாகும் குறித்த துண்டுப் பிரசுரங்களின் மூலம் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

எனவே, கூடங்குளம் அணு உலைக்கு எதிராக இந்திய மக்கள் போராடி வரும் இச்சந்தர்ப்பத்தில் இலங்கையர் ஆகிய நாமும் போராட வேண்டும். எமது சூழலை பாதுகாத்துக் கொள்ளவும், மீன்பிடித் தொழிலை பாதுகாத்துக் கொள்ளவும், உயிர்களை பாதுகாத்துக் கொள்ளவும், ஒன்று சேருவோம்.

எதிர்காலத்தில் ஏற்படும் அழிவை நிறுத்துமாறு இந்திய, இலங்கை அரசாங்கத்தினை வற்புறுத்துவோம். ஒன்றிணைந்து போராடுவோம் என அதில் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திருமலை மன்னார்வழியில் பேருந்து விபத்தில் சிக்கியது 40 பேர் காயம்



திருகோணமலைக்கும் மன்னாருக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் பேருந்து மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகியதில், பேருந்தில் பயணித்த 40 பேர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று கெபத்திகொலாவ - பதவிய வீதியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இவ்விபத்தில் படுகாயமடைந்தவர்கள் கெபத்திகொலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுப நிகழ்வொன்றிக்காக பஸ்ஸில் பயணித்த 40 பேரே காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதிக மழை காரணமாக பஸ் சாரதியினால் பஸ்ஸை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியாத வேளை, பஸ் வழுக்கிச் சென்று சரிந்ததனால் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

திருகோணமலையைச் சேர்ந்தவர்கள் மன்னாரில் சுப நிகழ்வொன்றிற்காகச் செல்லும் போது இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

## இலங்கையில் ...(தொடர்)

ஆஸ்பத்திரிகளில் இடம்பெறுகின்ற மரணங்களுக்குத் துணைபுரியும் நான்காவது காரணியாக பாரிசவாதம் விளங்குகின்றது.

இதேநேரம் இந்நாட்டில் பாரிசவாதத்திற்கு உள்ளாவோரின் எண்ணிக்கை ஒவ்வொரு தசாப்தமும் இரு மடங்குகள் படி அதிகரித்து வருகின்றது.

அதிலும் 25 சதவீதத்தினர் 65 வயதுக்கு உட்பட்டவர்களாவர். இந்நாட்டில் 15-59 வயதுக்கு இடைப்பட்டோரின் மரணத்திற்கு துணைபுரியும் காரணிகளில் பாரிசவாதம் 5 வது இடத்தில் உள்ளது என்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. என்றாலும் உலகில் வருடத்திற்கு 15 மில். பேர் பாரிசவாதத்திற்கு உள்ளாவதுடன் இவர்களில் 06 மில்லியன் பேர் உயிரிழக்கின்றனர். இம்மரணங்களில் 80 சதவீத வறிய மற்றும் வளர்முக நாடுகளிலேயே இடம்பெறுகின்றன.

அதேநேரம் மதுப்பாவனை, புகை பிடித்தல் பாவனை தவிர்ந்து கொள்ள வேண்டும். அத்தோடு உப்பு பாவனையைக் குறைப்பதுடன் மரக்கறி மற்றும் பழ வகைகளை அதிகளவில் உட்கொள்வது அவசியம் என்று மருத்துவ நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## கடும் மழை, புயல், வெள்ளம்...(தொடர்)

என்றும் மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அரசாங்கம் ஏற்கனவே, அறிவித்திருக்கின்றது.

நேற்று மாலை வரையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் வடபகுதியில் இடியுடன் கூடிய அதிகூடிய மழை வீழ்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளதாக காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

காற்றுடன் கூடிய அடை மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட குடும்பங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருப்பதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்தார்.

மீள்குடியேற்றப்பட்டவர்களில் சுமார் 4000 குடும்பங்கள் மீண்டும் இடம்பெயர்ந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு கூரை விரிப்புகள் தரைவிரிப்புக்கள் பொன்றவற்றைத் தருமாறு கோரியிருப்பதாகவும், அவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் மந்துவில், ஆனந்தபுரம், மல்லிகைத்தீவு போன்ற பகுதிகளில் தகரக் கூரைகளைக் கொண்டிருந்த தற்காலிக வீடுகளின் தகரங்ள் காற்றினால் அடித்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கூடாரங்களும் பல இடங்களில் காற்றினால் அள்ளிச் செல்லப்பட்டுள்ளது. இன்தால் பல குடும்பங்கள் மழையினால் நனைந்து பெரும் சிரமங்களுக்கு உள்ளாக நேர்ந்துள்ளது. வீடுகளின் மீது மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதாகவும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

மழையினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை அருகில் உள்ள பாடசாலைகளில் சென்று தங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு தங்குபவர்களுக்கு நிவாரணமாக உணவு வழங்குவதற்குரிய ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு கடலோரப் பகுதிகளில் வழமைக்கு மாறாக அதிக காற்று வீசுவதாகவும், நிலைமைகளைத் தாங்கள் அவதானித்து வருவதாகவும் அவர் கூறினார்.

முல்லைத்தீவில் பெய்த கடும் மழைக் காரணமாக ஒட்டிச்சுட்டானைச் சேர்ந்த 4000 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் உறுதிப்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவில் பெய்த மழையினால் ஒட்டிச்சுட்டான் முல்லைத்தீவு வீதி வெள்ள நீரினால் மூழ்கியுள்ளது. இதனால் அவ்வீதியுடனான போக்குவரத்து முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நுவரெலியாவில் 48 வீடுகளுக்கு சிறு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் குறைந்தது 11 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் அந்நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவுகின்ற மோசமான காலநிலை இன்னும் சில நாட்களுக்கு நீடிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதனால் மக்கள் விழிப்பாக இருக்கமாறும் அந்நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

## புலிகள் மீதான தடை...(தொடர்)

மாவட்டம் கொடைக்கானலில் கடந்த இரண்டு நாட்களாக தீர்ப்பாயத்தின் நீதிபதி வி.கே. ஜெயின் முன்னிலையில், பல்வேறு வழக்குகள் விசாரிக்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக மதுரையில் நேற்று விசாரணை நடைபெற்றது.

இதில் சென்னையைச் சேர்ந்த காவல்துறை ஆய்வாளர் வெங்கடேஸ்வரன், துணை ஆய்வாளர் செல்வராணி, திருச்சியைச் சேர்ந்த ஆய்வாளர் சீனிவாசன் ஆகியோர் விசாரிக்கப்பட்டனர். இந்த வழக்கின் இறுதி விசாரணை நவம்பர் 3ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## கடலுக்குச் செல்ல ...(தொடர்)

பகுதிகளில் கடல் கொந்தளிப்பதாக காணப்படுவதாகவும் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இதேவேளை மலையகத்தின் பல பகுதிகளிலும் தொடர்ந்தும் மழை பெய்வதால் நீர்த்தேக்கங்கள் சிலவற்றின் வான் கதவுகள் திறந்துவிடப்படுமென இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் மக்களுக்கு அது தொடர்பிலான தகவல்களை தாமதமின்றி வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கடற்படை, இராணுவம், விமானப் படை, பொலிஸார் கிராம உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அனைத்து அரச அதிகாரிகளும் அவசர நிலைமையின் போது செயற்படுவதற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரதம நீதியரசர்...(தொடர்)

சட்டத்தரணிகள், சட்ட வல்லுனர்களை விடவும் சட்டம் பற்றிய ஞானமுடையவர். அரசாங்கம், நாடாளுமன்றம், நிறைவேற்று அதிகாரம், நீதிமன்றம் ஆகியவற்றை ஒன்றுடன் ஒன்று மோதச் செய்ய சதித்திட்டம் தீட்டப்படுகின்றது.

இந்த நிலைமைகளை புரிந்து கொண்டு சிராணி பண்டாரநாயக்க கடமையாற்றுவார். உண்மை நிலைமைகளை மூடி மறைத்து நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர்.

எவ்வாறான சூழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டாலும் இந்த அரசாங்கத்தை கவிழ்ப்பது சுலபமானதல்ல என எஸ்.பி. திஸாநாயக்க தெரிவி த்துள்ளார்.

## கல்வித் தகைமை...(தொடர்)

விரும்புவதாக அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவுன் தெரிவித்துள்ளார்.

கல்விக்காக அரசாங்கம் பாரியளவு நிதியை ஒதுக்கீடு செய்த போதிலும் தொழில் சார் நிபுணத்துவமுடைய வெளிநாட்டவர்களின் சேவை அவசியப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்தியா, சீனா, மலேஷியா, பிலிப்பைன்ஸ், தென்கொரியா, வியட்நாம் உள்ளிட்ட ஆசிய பிராந்திய வலயத்தின் பத்து நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## இந்திய தேசத்தின்...(தொடர்)

சென்னையைச் சேர்ந்த இரண்டு காவல்துறை உத்தியோகத்தர்கள் நீதிமன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தியாவின் இறைமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் புலிகள் தொடர்ந்தும் அச்சுறுத்தலாக திகழ்ந்து வருவதாக அரச தரப்பு சட்டத்தரணி ஜெயின் தலைமை யிலான குழுவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். எனவே விடு தலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீடிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, புலிகளுக்கு எதிரான தடைக்கு மறுமலர்ச்சி திரா விட முன்னேற்றக்கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். விடுதலைப் புலிகள் இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் செயற்படவில்லை எனவும், இவ்வாறான ஓர் பின்னணியில் புலிகளுக்கு எதிரான தடையை தொடர்ச்சியாக நீட்டிப்பது பொருத்தமற்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

1994ஆம் ஆண்டு முதல் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந் தியா தடை விதித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. புலிகளுக்கு எதிரான தடையை கடந்த ஜூலை மாதம் இந்திய மத்திய அரசாங்கம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்திருந்தது. இந்த தடை உத்தரவிற்கு எதிராக தமிழகத்தின் சில அரசியல்வாதிகள் மேன்முறையீட்டு செய்துள்ளனர்.

## பாணின் விலை...(தொடர்)

இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் என்.கே. ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

மேற்படி உணவு உற்பத்திகளின் திருத்தப்பட்ட விலை தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக பேக்கரி உரிமையாளர்களின் சந்திப்பொன்று நேற்று காலை இடம்பெற்றதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு கோதுமை மாவின் விலை 6 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடுகளில் புலிகளின் செயற்பாடுகளை முடக்க அரசாங்கம் நடவடிக்கை

## பாதுகாப்புச் செயலாளர்

கடல்கடந்த நாடுகளிலிருந்து செயற்படும் சில புலி உறுப்பினர்களின் சட்டவிரோதமான செயற்பாடுகளை தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சித்து வருகிறது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையில் இறுதி யுத்தம் இடம்பெற்ற போது புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பலர் கொல்லப்பட்டனர். சில உறுப்பினர்கள் தப்பிச்சென்றுவிட்டனர். அவர்களே நிதி திரட்டல், பிரசார நடவடிக்கைகள் உள்ளிட்ட சட்டவிரோதமான செயற்பாடுகளில் கடல்கடந்த நாடுகளிலிருந்து செயற்பட்டு வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் நடைபெற்ற இளம் தலைவர்கள் சங்கத்தின் கூட்டத்தொடரில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முயற்சித்தார். இதன்பிரகாரம் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றன.

இருப்பினும், புலிகள் இயக்கத்தினர் யுத்த நிறுத்த உடன்படிக்கை மீறி மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர்.

எனினும், மனிதாபிமான நடவடிக்கையினை வெற்றிகரமாக முன்னெடுத்த அரசாங்கம், இடம்பெயர்ந்த மூன்று இலட்சம் மக்களின் நலன்புரி விடயத்தில் கவனத்தைச் செலுத்தி அவர்களை மீள்குடியேற்றம் செய்துள்ளது.

அத்துடன், ஐயாயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளையும் அகற்றியுள்ளது. புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு அவர்கள் சமூகமயப்படுத்தப்பட்டுள்ளனர்.

பலமான தலைமைத்துவம், மக்களின் ஆதரவு, சிறந்த திட்டமிடல், தெளிவான திட்டம் உயர்தர தொழில் தகைமைகளைக் கொண்ட படை அதிகாரிகள் வெளிநாடுகளில் பெற்றுக் கொண்ட பயிற்சி மற்றும் அனுபவத்தின் மூலமாகவே இந்த மனிதாபிமான நடவடிக்கையை சிறந்த முறையில் முன்னெடுக்க முடிந்தது.

இந்நிலையில், புலம்பெயர் தமிழர்கள் முறைகேடான நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் மனிதக் கடத்தல்களை மேற்கொண்டு இலங்கைக்கு எதிராக செயற்பட்டு வருகின்றது.

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சிலரினால் மேற்கொள்ளப்படும் அந்த சட்டவிரோதமான நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு அரசாங்கம் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்கவிருக்கிறது.

# நீண்டகாலத் திட்ட அடிப்படையில் எரிபொருள் இறக்குமதி

## அமைச்சர் சுசில்



இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நீண்ட கால திட்டத்தின் அடிப்படையில் எரிபொருட்களை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது எனப் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இதற்காக மாற்றுத் தரப்பினருடன் ஒப்பந்தகளைச் செய்துகொள்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றன. பொருளாதார தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் ஈரானிலிருந்து எரிபொருளைக் இறக்குமதி செய்வது நீண்ட காலத்துக்கு சாத்தியமாகாது. இதனையடுத்தே மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்தது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு பல தரப்பினரிடமிருந்தும் கேள்வி கோரப்பட்டுள்ளது. அதனால், எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு இடமில்லை என்பதுடன் நீண்டகால தயார்ப்படுத்தலின் அடிப்படையில் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டு எதிர்காலத்தில் எரிபொருள் இறக்குமதி செய்யப்படும் என்று அமைச்சர் மேலும் கூறினார்.

இதேவேளை, ஓமான் மற்றும் சவூதி அரேபியா ஆகிய நாடுகளிடமிருந்து எரிபொருள் இறக்குமதி செய்யப்படும் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு கிடையாது என பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்படுவதனால் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பாகிஸ்தான் பிரஜைக்கு விளக்கமறியல்

அனுமதிப்பத்திரமின்றி 25 கிலோ கிராம் வெள்ளை சந்தனத்துடன் கைது செய்யப்பட்ட பாகிஸ்தான் பிரஜையை நீர்கொழும்பு பதில் நீதவான் ஜே.எம். ஜயசுந்தர எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

குறித்த பாகிஸ்தான் பிரஜை நீர்கொழும்பு, ஏத்துக்கால பிரதேசத்தில் வைத்து நீர்கொழும்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# சாட்சிகளை பாதுகாக்க சட்டமூலம் விரைவில்

சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டமூலத்தின் இறுதி வரைவுக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் சட்டமா அதிபர் பாலித்த பெர்ணான்டோ தெரிவித்தார்.

இந்தச் சட்டமூலம் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக அது நீதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டமூலம் 2008ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் அந்த சட்டமூலத்தில் அரசாங்கம் சில திருத்தங்களை மேற்கொள்ள வேண்டி இருந்தமையினால் அது, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை.

இந்நிலையில், அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை உள்ளிட்ட அமைப்புகளிடமிருந்து அரசாங்கம் எதிர்கொண்ட அழுத்தத்தை அடுத்தே இந்த சட்டமூலத்தை திருத்தங்களுடன் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

# விவசாயிகளுக்கு ஆதரவாக பொலிஸாருக்கு ஆலோசனை

## மகிந்த யாப்பா அபேவர்த்தன

விவசாயத்துக்கு தீங்கு விளைவிக்கும் வனவிலங்குகளை ஒழிக்க வேண்டும் என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த யாப்பா அபே வர்தன தெரிவித்தார்.

குரங்குகள், காட்டுப் பன்றிகள் மற்றும் முதலைகள் என்பன மக்களின் விவசாயத்திற்கு தீங்கு விளைவிக்கின்றன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பண்டாரவளையில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

தங்காலையில் விளை நிலத்துக்கு சேதம் விளைவித்த குரங்குகள் பிடிக்கப்பட்டு யால தேசிய சரணாலயத்தில் விடப்பட்டுள்ளன.

எனினும், அந்த குரங்குகள் மீளவும் தப்பிவந்து விவசாய நிலங்களை சேதப்படுத்துகின்றன. தங்களுடைய விளை நிலங்களுக்குச் சேதம் விளைவிக்கின்ற வனவிலங்குகளை கொன்றொழித்தால் அவர்களுக்கு எதிராக எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டாமென நான் பொலிஸாருக்கு ஆலோசனை வழங்குவேன் என்றார்.

# ஐந்து மில்லியன் ரூபா பெறுமதி: ஹெரோயின் கடத்தியவர் கைது

சுமார் 5 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளைக் கடத்திய நபர் ஒருவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். அங்கொட கொட்டிக்காவத்தை பிரதேசத்தில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடம் சுமார் 605 கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப் பொருள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்டவரிடம் காவல்துறையினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# இன்றைய இராசி பலன் (30.10.2012)

**நந்தன வருடம் ஐப்பசித் திங்கள் 14ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**நட்சத்திரம்** : பரணி பின்னிரவு 5.43 வரை அதன் பின் கார்த்திகை
**திதி** : பிரதமை பின்னிரவு 3.31 வரை. அதன் பின் துதியை
**சுபநேரம்** : 10.33 - 12.03
**இராகுகாலம்** : 3.03 - 4.33
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : தொழில் முன்னேற்றம், இரக்க குணம், உறவினர் உதவி
**இடபம்** : குறைந்த வருமானம், தொழில் சிரமம், தடுமாற்றம்
**மிதுனம்** : மன நிம்மதி, நற்செய்தி, குடும்ப மகிழ்ச்சி
**கடகம்** : உத்தியோக நன்மை, வாக்கு சாதுரியம், மற்றவர்களால் மதிப்பு
**சிங்கம்** : தொழிற் கலகம், சந்தேகம், குடும்ப மனஸ்தாபம்
**கன்னி** : வியாபார விருத்தி, குழப்ப நிலை, நண்பர்களால் தொல்லை
**துலாம்** : பணவரவு, புதிய எண்ணம், மற்றவர் உதவி
**விருச்சிகம்** : நற்காரிய செய்கை, தொழில் தடை நீக்கம், மனநம்பிக்கை
**தனுசு** : வாக்கு கலகம், ஏமாற்றம், தொழில் சிரமம்
**மகரம்** : மனக்குழப்பம், வருவாய் குறைவு, பெரியோர் ஆலோசனை
**கும்பம்** : நற்சிந்தனை, பாராட்டு, வியாபார முன்னேற்றம்
**மீனம்** : காரியத் தடை, அதிக செலவு, தொழில் சஞ்சலம்

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# புகலிடக் கோரிக்கையாளர்களாக நுழையும் முன்னாள் போராளிகள்

## அவுஸ்திரேலியா



இலங்கை யுத்தத்துடன் தொடர்புடைய போராளிகள், தற்போது புகலிடக் கோரிக்கையாளர்களாக அவுஸ்திரேலியாவுக்கு வருகின்றனர்.

இவர்களுக்கு அவுஸ்திரேலியாவிலிருக்கும் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் பொருளாதார ரீதியில் உதவி வருகின்றனர் என்று அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு இவ்வருடம் புகலிடக் கோரிக்கையாளர்களாகச் சென்ற முன்னாள் போராளிகள் அறுவர் அந்நாட்டுப் பாதுகாப்பு தரப்பினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடைய மேலும் அறுவர் அந்நாட்டில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இலங்கை அதிகாரிக-ளினால் மேலம் ஆறு பேர் கைது செய்யப்பட்டதுடன் மீனவர்களைத் தாக்கிவிட்டு மீன்பிடிப் படகொன்றில் புகலிடக் கோரிக்கையாளர்களாகத் தப்பி வந்த 14பேர் திருப்பி அனுப்பப்பட்டனர்.

அவர்களால் தாக்கப்பட்டு கடலுக்குள் வீசப்பட்டதாகக் கூறப்படும் மீனவர்கள் பலியாகியிருக்கலாம் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமான பிரசாந்த ஜயக் கொடி தெரிவித்தார்.

இதேவேளை, முன்னாள் போராளிகள் தொடர்பில் இலங்கை, அவுஸ்திரேலியாவுக்கு தகவல்களை வழங்கி ஒத்துழைப்புடன் செயற்படுவதாக அவுஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் அட்மிரல் திஸச சமரசிங்க தெரிவித்தார்.

# 13 வது திருத்தத்தை இல்லாதொழிப்பது குறித்து பேச கோத்தபாயவுக்கு அருகதையில்லை


- விக்கிரமபாகு

13 வது திருத்தத்தை இல்லா தொழிப்பது குறித்து பேசுவதற்கு கோத்தபாயவுக்கு அருகதையில் லை. அவர் ஓர் அரச அதிகாரி. இதை புரிந்துகொள்ளாமல் அவர் எக்காளமிடக் கூடாது. 13 வது திருத்தம் தமிழர்களுக்குத் தீர்வா காது என்றால் அவர்களுக்கான தீர்வு என்ன என்றும் விக்கிரம பாகு கேள்வியெழுப்பினார்.

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம் பமாகவுள்ள ஐ.நா. மனித உரி மைப் பேரவையின் பூகோள காலக்கிரம மீளாய்வுத் தொடரில் இலங்கைக்குப் பேராபத்து காத்தி ருக்கிறது. கடந்த ஜெனிவாக் கூட்டத்தொடரில் சர்வதேசத்துக்கு இலங்கை வழங்கிய உறுதிமொழி கள் எவையும் இன்றுவரை நிறை வேற்றப்படாத நிலையில், உலக நாடுகள் அனைத்தும் இலங்கை யின் மனித உரிமை நிலைவரம் மற்றும் சிறுபான்மையினருக்கு எதிரான அநீதிகள் குறித்து கேள் விக் கணைகளைத் தொடுக்கத் தயார் நிலையில் உள்ளன.

அதுமட்டுமன்றி, உள்நாட்டிலும் மஹிந்த அரசுக்கு ஒரு பயங்கர மான நெருக்கடி நிலை ஏற்பட வுள்ளது. இவ்வாறு தெரிவித்தார் நவசம சமாஜக் கட்சியின் தலை வர் கலாநிதி விக்கிரமபாகு கரு ணாரட்ன.

நாட்டில் மீண்டும் பிரிவினை வாதப் போரை ஏற்படுத்த பாது காப்புச் செயலாளர் கோத்தபாய



ராஜபக்ஷ பிள்ளையார்சுழி போட் டுள்ளார். இவரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இனவாதப் போர் தற்போது நாட்டில் அதி யுச்சம் அடைந்துள்ளது என்றும் விக்கிரமபாகு தெரிவித்தார்.

13ஆவது திருத்தத்தை இல்லா தொழிப்பது குறித்து பேசுவதற்கு கோத்தபாயவுக்கு அருகதையில் லை. அவர் ஓர் அரச அதிகாரி. இதை புரிந்துகொள்ளாமல் அவர் எக்காளமிடக் கூடாது.

13ஆவது திருத்தம் தமிழர்க ளுக்குத் தீர்வாகாது என்றால் அவர்களுக்கான தீர்வு என்ன என்றும் விக்கிரமபாகு கேள்வி யெழுப்பினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டில் மீண்டும் பிரிவினைவா தத்தை ஏற்படுத்த அரசின் உயர் மட்ட நடவடிக்கைகளை சாதக மாக அமைத்துக் கொள்வதற்கா கக் கீழ் மட்டத்தில் சிறுபான்மை மக்களது வழிபாட்டுத் தலங்க ளும், புனித சின்னங்கள் மீது தாக்குதல் நடவடிக்கைகள் கட்ட விழ்த்து விடப்பட்டுள்ளன.

நாட்டில் இனவாதத்தைத் தூண் டும் வகையில் 13 ஆவது திருத் தச் சட்டத்தை நீக்கவேண்டும் என்ற கோஷம் பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் எழுப்பப்பட்டுள் ளது. இதனடிப்படையில்தான் சிறு பான்மை மக்களது வழிபாட்டுத் தலங்களைத் தாக்கும் சம்பவங் கள் இடம்பெற்று வருகின்றன.

அடுத்தாண்டிற்கான வரவு செல வுத் திட்டம் நாட்டில் சமர்ப்பிக்கப் படவிருக்கின்ற நிலையில் அத்தி யாவசியப் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுளது. இதனைக் கண்டித்து மாபெரும் அரச எதிர்ப்புப் போராட்டம் நாடு முழுவது முள்ள மக்களால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எனவே, இவற்றைக் கட்டுப்ப டுத்தி மக்களைத் திசைதிருப் பவே அரசு இதுபோன்ற நடவடிக் கைகளில் ஈடுபட்டு வருகின்றது என்றார் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன.

# ஜே.வி.பி. சட்டத் திருத்தங்கள் எதுவும் வேண்டாம் என்கிறது

அரசியலைமைப்பின் 13 ஆவது திருத்தமும் வேண்டாம் 18 ஆவது திருத்தமும் எமக்கு வேண்டாம் என்று மக்கள் விடுதலை முன் னணி (ஜே.வி.பி) தெரிவித்துள் ளது.மக்கள் விடுதலை முன்னணி காரியாலயத்தில் இன்று நடை-பெற்ற ஊடகவியலாளர் மாநாட் டில் கலந்துகொண்டு உரையாற் றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில்,

மாகாண சபைகளை அமைப் பதற்காகவும் அதிகாரத்தை பரவ லாக்குவதற்காகவும் உருவாக்கப் பட்ட அரசியலைமைப்பின் 13 ஆவது திருத்தம் மட்டுமன்றி சுயாதீன ஆணைக்குழுக்களை இல்லாதொ ழித்து ஜனாதிபதிக்கு சகல அதிகாரங்களையும் கொடுத்த அரசியலைமைப்பின் 18ஆவது திருத்தமும் இரத்து செய்யப்பட வேண்டும்.

இவ்விரு திருத்தங்கள் மட்டு மன்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை யும் இல்லாதொழிக்க வேண்டும். மொத்தத்தில் 13 ஆவது திருத் தம், 18 ஆவது திருத்தம் மற்றும் நிறைவேற்று ஜனாதிபதி முறை மை இம்மூன்றும் இல்லாதொழிக் கப்படல் என்பதே ஜே.வி.பி.யின் நிலைப்பாடாகும் என்றார்.

# இலங்கைக்கு ஜப்பான் 4000 கோடி ரூபா நிதி உதவி

இலங்கையின் சுகாதார சேவை களின் அபிவிருத்திக்காக, ஜப் பானின் அபிவிருத்தி நிறுவனம் 4000 கோடி ரூபா வழங்கி இருப் பதாக சுகாதார அமைச்சு தெரி விக்கிறது.

இதன்படி, மட்டக்களப்பு, களு வாஞ் சிக்குடி வைத்தியசாலை யை அபிவிருத்தி செய்வதற்காக வும் ஜப்பானின் அபிவிருத்தி நிறு வனம் 500 மில்லியன் ரூபாய்க ளை நிதி உதவியாக வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்த அபிவிருத்தி பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட விருப்பதாகவும், எதிர்வரும் 2014ம் ஆண்டு இந்த பணிகள் நிறைவடையும் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள் ளது.



வன்னியில் முன்னாள் புலிப் பிரமுகர் கே.பி. எனப்படும் கே. பத்மநாதன் அமைத்திருக்கும் மாதிரிப் பண்ணையின் முகப்புத் தோற்றத்தை இப்படத்தில் காணலாம்.

# இயற்கையான வீட்டுத் தோட்டச் செய்கையின் மூலம் ஆரோக்கியமான உணவைப் பெற்றுக் கொள்ளுங்கள்

- கிளிநொச்சி அரச அதிபர்

இயற்கையான முறையில் பயிர்ச் செய்கையினை மேற்கொண்டு நஞ்சுகள் கலக்காத உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்து பயன்படுத்தும் மக்களாகவும் நாம் இருக்கவேண்டும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்த செயற் றிட்டத்தின் மூலம் வளமான ஒரு வீட்டுத்தோட்டத் தினை உரு வாக்கி உயர்ந்த பயன்பெற்று மக்கள் தங்கள் வாழ்வாதாரத் தினை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்பதோடு அரசின் இந்த திட்டத்தின் மூலம் அதன் உச்ச பயனை பெற்றுக் கொள்வது மக்களின் பொறுப்பு எனவும் குறிப்பிட்டார் திவிநெகும - வாழ்வின் எழுச்சி நான்காம் கட்ட நிகழ்வின் கிளிநொச்சி மாவட்ட ரீதியான நிகழ்வு இன்று கிளிநொச்சிபச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் முகாவில் கிராமத்தில் இடம் பெற்றுள்ளது. இந்நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவி த்துள்ளார்.

25-10-2012 காலை 10.11 மணிக்கு முகாவில் பாலசுப்பிர மணியம் சௌந்தரராஜனியின் வீட் டுத்தோட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு 10.11 மணிக்கு நிகழ்வினை ஆரம் பித் துவைத்தார் செழிப்பானதொரு வீட்டுத்தோட்டத்திற்கு உரிமை யாளராகுங்கள் என்ற வாசகத்து டன் குடும்ப பொருளாதாரத்தை யும் போசாக்கையும் மேம்படுத்தும் ஐம்பது இலட்சம் மனைப்பொ ருளாதார அலகுகளை விருத்தி செய்யும் தேசிய செயற்றிட்டத் தின் நான்காம் கட்ட நிகழ்வின் பேது அப்பிரதேசத்தை சேர்ந்த பல பயனாளிகளுக்கு பயன்தரு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செய லர் சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளி-நொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சீர்ணிவாசன், மாவட்டச் செயலக திட்டப்பணிப்பாளர் மோக னாவன், பிரதித் திட்டப் பணிப் பாளர் கேதீஸ்வரன், கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் தயாரூபன், மாவட்ட விவசாயத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் செல்வராசா மற்றும் கிராம அலுவலர்கள், பொதுமக் கள் ஆகியோர் கலந்துகொண் டனர்.

# மொபைல் தொலைந்ததற்கான நம்ப முடியாத காரணங்கள் பட்டியலிடுகிறது பிரிட்டன் இன்சூரன்ஸ் நிறுவனம்

மொபைல் போனை மாடு விழுங்கி விட்டது, கடல் பறவை தூக்கி சென்று விட்டது, குரங்கு பறித்து கொண்டது என்பது போன்ற காரணங்களை இன்சு ரன்ஸ் நிறுவனத்திடம் வாடிக்கை யாளர்கள் தெரிவித்து உள்ளனர்.

மொபைல் போன் சேதமடைந்த தற்கான, நம்ப முடியாத காரணங் கள் கூறிய வாடிக்கையாளர்களை பற்றி, பிரிட்டன் இன்சூரன்ஸ் கம்பெனி ஒன்று, செய்தி வெளி யிட்டு உள்ளது. "பசு ஒன்று கன்று ஈன்ற போது, அதற்கு உதவுவதற்காக, மொபைல் போனில் உள்ள, டார்ச்சை பயன் படுத்தினேன். அப்போது, மொபை ல் போன், பசுவின் பின்புறம் வழியாக, அதன் வயிற்றுக்குள் சென்று விட்டது. பின்னர், சேத மடைந்த நிலையில் வெளியே



வந்தது" என, விவசாயி ஒருவர் தெரிவித்து உள்ளார்.

"மகளின் பிறந்த நாளை-யொட்டி, "கேக்" தயாரித்த போது, தவறுதலாக மாவுக்குள் வைத்து அவித்து விட்டதால், போன் சேதமடைந்து விட்டது" என, ஒரு பெண் தெரிவித்து உள்ளார். கடற்கரையில் இருந்த போது, கடல் பறவை ஒன்று, மொபைல் போனை கொத்தி எடுத்து சென்று விட்டதாகவும், காரிலிருந்து குரங் கை படம் எடுத்த போது, அது பறித்து சென்று விட்டதாகவும் சில வாடிக்கையாளர்கள் தெரிவ-ித்து உள்ளனர். கழிப்பறை மற்றும் கடலில் விழுந்து விட்ட தாக ஒரு சிலர் குறிப்பிட்டு உள் ளனர். சாகச காட்சியில் நடித்த போது, கொழுந்து விட்டு எரிந்த தீயில் விழுந்து மொபைல் போன் சேதமடைந்ததாக, நடிகர் ஒருவர் தெரிவித்து உள்ளார். ஏமாற்றிய காதலனை, தாக்குவதற்காக, மொபைல் போனை வீசி எறிந்த போது, அதை பிடிக்க காதலன் தவறியதால், சுவரில் மோதி போன் சேதமடைந்ததை ஒரு பெண் உண்மையாக ஒப்புக் கொண்டு உள்ளார்.

# வன்னி அபிவிருத்திக்கு சந்தர்ப்பவாத அரசியலால் சவால் விடுக்கப்படுகிறது

## அமைச்சர் ரிஷாத் பதியுதீன்

"தற்போதைய அரசு அமைதியான சூழலை உருவாக்கியுள்ளதுடன் பல கோடிகளை செலவு செய்து அனைத்து இனங்களின் முன்னேற்றதிற்காகவும் செயற்பட்டு வருகின்றது" என வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியா, பட்டானிச்சூரில் இடம் பெற்ற ஹஜ்ஜுப் பெருநாள் விளையாட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

"வவுனியா மாவட்டம் இரவு வேளையிலே அச்சம் இன்றி விழா எடுப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. மூன்று தசாப்தங்களாக யுத்தத்தின் பீதியினால் நாம் பெரும் கஸ்டங்களை எதிர்நோக்கியிருந்தோம். தற்போது நாம் சந்தோசமாகவும் சுதந்திரமாகவும் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

வன்னி அபிவிருத்திக் குழுவின் தலைவர் என்ற வகையில் வன்னி பிரதேசத்தின் அபிவிருத்திக்கு நேர்மையான வகையில் செயற்பட்டு வருகின்றேன். எனினும் எவ்வாறான வேலைத்திட்டத்தை செய்தாலும் அவற்றுக்கு சவால்விடும் வகையில் சந்தர்ப்பவாத அரசியலையும் நாம் காண்கின்றோம்.



யுத்தத்திற்கு பிறகான இக்காலத்தில் மீள்குடியேற்றமாக இருந்தால் என்ன மீள்குடியேற்றத்திற்கு பின்னரான அபிவிருத்தியாக இருந்தால் என்ன வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் வன்னி அபிவிருத்திக் குழுவின் தலைவர் என்ற வகையில் மனச்சாட்சியுடன் ஆற்றிக்கொண்டிருக்கின்றேன்.

இவ்வாறு செயற்படும்போது இவ் இனங்களுக்கிடையில் குழப்பங்களையும் பிளவுகளையும் ஏற்படுத்தவேண்டுமென சிலர் முயற்சி செய்துகொண்டிருக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகளின் இழப்பிற்கு பிறகு அன்று நடந்த சில செயற்பாடுகளை செய்வதற்கு சிலர் முயற்சித்துக் கொண்டிருக்கின்றார்கள். எனினும் தமிழ் பேசும் மக்கள் நாங்கள் ஒற்றுமையாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

அன்று எவ்வாறு எம்மை கொலை செய்ய பார்த்தார்களோ அதே போல் நாம் செய்யும் நல்ல வேலைகளையும் கறுப்பு கண்ணாடி போட்டு பார்க்கும் நிலை எற்பட்டுள்ளது.

ஆனால் எந்த வொரு இனமும் பாதித்துவிடக் கூடாது என்பதில் நாம் கவனமாக இருக்கின்றோம்" என்றார்.

# ஏ.ரீ.எம். அட்டை மோசடி : இலங்கையர் இருவர் அமெரிக்காவில் கைது

ஏ.ரீ.எம். அட்டை மோசடியில் ஈடுபட்ட இலங்கையர்கள் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலியான ஏ.ரீ.எம். அட்டைகளை பயன்படுத்தி குறித்த இரண்டு இலங்கையர்களும் மோசடியான முறையில் பணம் பெற்றுக் கொண்டுள்ளதாக நியூயோர்க் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

55000 அமெரிக்க டொலர் பணத்தை இவர்கள் மோசடி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்களிடமிருந்து பெரும் எண்ணிக்கையிலான போலி ஏ.ரீ.எம். அட்டைகள் மீட்கப்பட்டுள்ளன. 28 வயதான சிவரூபன் ஞானபண்டிதன் 24 வயதான ராகவன் பத்மேசேனன் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த இருவரும் கனடாவின் ஒன்டாரியோ மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கற்பிட்டி கடலில் மூழ்கி ஒருவர் பலி

கற்பிட்டி கடலில் குளிக்க சென்றவர்களில் ஒருவர் கடலில் மூழ்கி பலியாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கற்பிட்டி கடலில் குளிக்க சென்ற அறுவரில் நால்வர் கரை திரும்பியதாகவும் ஒருவர் கடலில் மூழ்கி பலியாகியுள்ளதாகவும் மற்றுமொருவர் காணாமல் போய்யுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மலேசியாவிற்குள் நுழைவதற்கு இனிமேல் 'பயோ விஸா' தேவை

மலேசியாவுக்குள் நுழைவதற்கு இலங்கையர்களுக்கும் "பயோ விஸா" முறைமை தேவை என அந்நாட்டு குடிவரவு திணைக்களம் அறிவித்துள்ளது.


விஸா மோசடிகளைத் தடுக்கும் வகையிலேயே இந்த முறைமையினை தூதரகங்கள் அறிமுகப்படுத்தியுள்ளதாக குடிவரவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் "பயோ விஸா" முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டவர்களின் கைவிரல் அடையாளம் தூதரகங்களினால் உறுதிப்படுத்தப்படும்.

அத்துடன் மலேசியாவுக்குள் நுழையும் போதும் அந்த கைவிரல் அடையாளம் உறுதிப்படுத்தப்படும்.

பாதுகாப்பு முறைமைகளுக்கு அமைவாக பெற்றுக்கொள்ளப்படும் கைவிரல் அடையாளமானது கடவுச் சீட்டிலுள்ள தரவுகள் மற்றும் தனிப்பட்ட தரவுகளுடன் ஒத்துப் போக வேண்டும்.




இந்த திட்டமானது, எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்படும் என்று தெரிவித்த மலேசியாவின் குடிவரவு திணைக்கள பணிப்பாளர் நாயகம் அலைஸ் அஹமட், சீனா, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், நைஜீரியா மற்றும் மியன்மார் உள்ளிட்ட நாடுகளும் இந்த "பயோ விஸா" முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மலேசியாவுக்கு சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து பெருந்தொகையானோர் சுற்றுலாப் பயணிகளாக வருகை தருவரை அடுத்தே இந்த "பயோ விஸா" முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை



13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய நாடாளுமன்றத்தில் ஏதேனும் யோசனை முன்வைக்கப்பட்டால், அதனை எதிர்க்க போவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

ஏற்பட்டுள்ள நிலைமையை கவனத்தில் கொண்டு, தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாணும் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு அரசாங்கத்திடம் முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருந்து நீக்குவதற்கு, மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டும் என அரசாங்கத்திற்கு யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளதால், அவ்வாறான மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், அது மாகாண மட்டத்தில் நடத்தப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் செயலாளர் நாயகம் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் உள்ள இனவாத கட்சிகள் மாத்திரம் 13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்து வருகின்றன. அவர்களின் இந்த செயற்பாடு மிகவும் ஆச்சரியமானது.

எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் நிலைப்பாடு அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள ஹசன் அலி, தேசியப் பிரச்சினைக்கு 13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் கீழ் தீர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டுக்கும், சர்வதேச சமூகத்திற்கும், வாக்குறுதியளித்துள்ளதால், இந்த அரசியல் அமைப்புத் திருத்தத்தை அடிப்படையாக கொண்டு, ஜனாதிபதி நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு விரைவில் அரசியல் தீர்வை வழங்குவார் என தான் நம்புவதாகவும் கூறியுள்ளார்.

உலகில் வேறு நாடுகளில் இதனை விட அதிகளவான மொழிகள், இனங்கள், மதங்கள், கலாசாரங்களை கவனத்தில் கொண்டு அந்த நாடுகளில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு வெற்றிகரமான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறான நாடுகள் தற்போது உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளாக மாறியுள்ளன.

ஒவ்வொரு பிரதேசத்திற்குரிய பிரச்சினைகளை சம்பந்தப்பட்ட மாகாண சபைகளின் ஊடாக தீர்த்து கொள்வது சிறந்தது எனவும் ஹசன் அலி கூறியுள்ளார்.

# குடாநாட்டை தனிமைப்படுததவே 'லயன் எயார்' மீது தாக்குதல்!

யாழ்ப்பாண குடாநாட்டை தனிமைப்படுத்தும் நோக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் லயன் எயார் பயணிகள் விமானம் மீது தாக்குதல் நடத்தியதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

1998ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்த தந்திரோபாயங்களில் ஓர் அங்கமாக இந்தத் தாக்குதலை நோக்க வேண்டுமென இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, விமானத்தின் இடிபாடுகளை மீட்கும் பணிகள் தமது முன்னிலையில் நடைபெற வேண்டுமென மன்னார் நீதவான் அறிவித்துள்ளார். இந்தத் தாக்குதலை நடத்திய தற்காக புலிகளின் தலைவர் பிரபாகரன் தமக்கு கைத்துப்பாக்கி ஒன்றை பரிசாக வழங்கியதாக முன்னாள் புலி உறுப்பினர் ஒருவர் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரிடம் தெரிவித்துள்ளார்.

# இந்திய பிரஜை ஒருவர் மட்டக்களப்பில் கைது

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் சட்டவிரோதமாக தங்கியிருந்து, துணிமணி வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த இந்திய பிரஜை ஒருவரை களுவாஞ்சிகுடி அதிரடிப்படையினர், கைதுசெய்துள்ளனர்.

50 வயதான இந்த இந்திய பிரஜை மேலதிக விசாரணைகளுக்காக களுவாஞ்சிக்குடி காவற்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவில் இருந்து சுற்றுலாப் பயண அனுமதியில் இலங்கை சென்று, இந்த நபர் இவ்வாறு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளார்.

ஏற்கனவே இவ்வாறு வியாபாரத்தில் ஈடுபட்ட பலர், கைது செய்யப்பட்டு, இலங்கையில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தமிழ்நாதம்
Thamil Naatham
ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

## யுத்தத்துக்குப் பகடைக்காய்களாகிய அப்பாவி வடபுல முஸ்லிம்கள்

யுத்தம் எப்போதுமே கொடூரமானதுதான். இலங்கையின் இனமுறுகல்தான் யுத்தமாக வெடித்தது. இன ஒடுக்குமுறையில் ஈடுபடுவதாகக் குற்றம் சாட்டப்பட்ட அரசாங்கமும், இன ஒடுக்கு முறைக்கு எதிராக ஆயுதம் ஏந்தினோம் என்று கூறிக்கொண்ட தமிழ் இயக்கங்களும் அப்பாவி மக்களைத்தான் வேட்டையாடின. அரசாங்கம் வேறு அரசு இயந்திரம் வேறு. ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் என்றாலும் சரி, சர்வாதிகார ரீதியாக உருவாக்கப்பட்ட அரசாங்கம் என்றாலும் சரி அவற்றைப் பாதுகாப்பது அரசு இயந்திரமே. ஆயுதப் படைகள், நிர்வாகக் கூட்டமைப்புகள், நீதிமன்றங்கள் எல்லாமே அரசு இயந்திரத்தின் அங்கங்கள்தான்.

இலங்கையின் முப்பது வருடகால யுத்தம் அரசாங்கத்தின் பாதுகாவலர்களான ஆயுதப் படைகளுக்கும் அரசுக்கெதிராக ஆயுதம் ஏந்திய தமிழ் குழுக்களுக்கும் இடையில்தான் இடம்பெற்றன. 1986ஆம் ஆண்டு ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய தமிழ் இயக்கங்கள் மீது புலிகள் இயக்கம் தாக்குதல் தொடுத்ததோடு, அவற்றைத் தடை செய்தது. புளொட், ஈரோஸ் ஆகிய இயக்கங்களும் இயங்க முடியாதபடி தடைசெய்யப்பட்டன.சகோதரப் படுகொலைகளை அனைத்து இயக்கங்களுமே மேற்கொண்டிருக்கின்றன. ஆனால் புலிகள் இயக்கமே கர்ணகடூரமாக சகோதரப் படுகொலைகளில் ஈடபட்டது. 1985ஆம் ஆண்டு முதல் தடவையாக ஆயுதம் ஏந்திய இயக்கங்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் இலங்கை அரசோடு திம்புப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டன.

அடுத்தவருடமே அனைத்துத் தமிழீழ இயக்கங்களையும் புலிகள் இயக்கம் வேட்டையாடியது. சகோதரப் படுகொலைகள் மட்டுமல்ல, யுத்தத்தோடு எந்தவகையிலும் சம்பந்தப்படாத அப்பாவித் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களும் கொன்று குவிக்கப்பட்டனர். வடமாகாணத்தை விட கிழக்கிலேயே படுகொலைகள் மிக மோசமாக இடம்பெற்றன. வடக்கைப் போலன்றி மூவின மக்களும் பரந்தும் செறிந்தும் வாழ்ந்த மாகாணம் கிழக்கு எல்லைக் கிராமங்களில் வசித்து வந்த அப்பாவிச் சிங்கள மக்களை புலிகள் வேட்டையாடியிருக்கிறார்கள். காத்தான்குடி, ஏறாவூர் பள்ளிவாசல்களுக்குள் புகுந்து தொழுது கொண்டிருந்த நூற்றுக் கணக்கான முஸ்லிம்களைப் புலிகள் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். 1990ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி காத்தான்குடிப் பள்ளிவாசலில் புலிகள் நடாத்திய தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள்.

இதற்கு முன்னரும் பின்னரும் முஸ்லிம்களும் கொல்லப்பட்டார்கள் தமிழர்களும் கொல்லப்பட்டார்கள் சிங்களவர்களும் கொல்லப்பட்டார்கள், கொக்கட்டிச் சோலை, மைலந்தன்னை, வீரமுனை, மல்லிகைத் தீவு, வனத்தாப்பிட்டி, மல்வத்தை உட்பட பல கிராமங் களுக்குள் புகுந்து அப்பாவித் தமிழ் மக்களை படையினரும் முஸ்லிம், ஊர்காவல்படை வீரர்களும் இணைந்து கொன்றிருக்கிறார் கள். காணாமல் போனவர்களின் பட்டியலில் பலரின் பெயர்கள் பின்னாட்களில் கண்டு பிடிக்கப்பட்டன. இது கிழக்கில் நிலவிய நிலைமை. வடக்கிலிருந்தும் சிங்கள, முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் ஒக்டோபர் மாதம் 28,29,30 ஆம் திகதிகளில் 78 ஆயிரம் முஸ்லிம் மக்கள் வடமாகாணத்திற்கு வெளியே விரட்டப்பட்டார்கள்.

72 மணித்தியாலத்திற்குள் 78 ஆயிரம் முஸ்லிம் மக்கள் வடக்குக்கு வெளியே விரட்டப்பட்டார்கள். கிழக்கு மாகாணத்தில் ஆயுதப் படைகளுடன் சேர்ந்து செயலாற்றிய முஸ்லிம் ஊர்க்காவல் படைவீரர்கள் சிலர் அடாவடித்தனங்களில் ஈடுபட்டார்கள் என்பது உண்மைதான்.கொக்கட்டிச்சோலையில் படையினரால் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். கொக்கட்டிச்சோலையில் இரண்டாவது தடவையாகவும் அப்பாவித் தமிழ் மக்கள் வேட்டையாடப்பட்டிருக்கிறார்கள்.

முஸ்லிம்கள் ஊர்க்காவல் படையில் சேர்க்கப்பட்டமைக்கு நியாயமான காரணங்கள் இருக்கலாம். அதாவது புலிகளின் தாக்குதலிலிருந்து முஸ்லிம் கிராமங்களையும் மக்களையும் பாதுகாப்பதற்காகத்தான் முஸ்லிம்கள் ஊர்க்காவல்படைகளில் சேர்க்கப்பட்டார்கள் என்றால் அது நியாயம்தான். ஆனால் அவர்களே மாற்று இன மக்கள் மீது அடாவடித்தனங்களைக் கட்டவிழ்த்து விட்டார்களென்றால் அது அக்கிரமம்.

வடக்கில் பிட்டும் தேங்காய்ப் பூவும் போல மிகவும் அந்நியோன்யமாக தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் இரண்டே இரண்டு மணித்தியாலத்துக்குள் முஸ்லிம் சகோதரர்கள் விரட்டப்பட்டார்கள். வட மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் வாழ்ந்த முஸ்லிம் மக்களுக்கு வாழ்விடத்தை விட்டு வெளியேற 48 மணித்தியாலக் கால அவகாசம் வழங்கப்பட்டது.

யுத்தம் முடிவுக்கு வந்து மூன்று வருடங்கள் கழிந்துவிட்ட நிலையிலும் இன்னமும் பெரும்பாலான அந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படவில்லை. வடக்கிலிருந்து விரட்டப்பட்ட கணிசமான முஸ்லிம் மக்கள் புத்தளத்தில் நிரந்தரமாகவே குடியேறி விட்டார்கள். அனுராதபுரம், குருநாகல் உட்பட தென்னிலங்கையில் நூற்றுக்கு மேற்பட்ட முகாம்களில் அகதிகளாகத்தான் இந்த மக்கள் தஞ்சமடைந்தார்கள். யுத்தம் அகதிகளாக்கிய தமிழ் மக்களைப் போல, முஸ்லிம் மக்களும் அவலங்களைச் சுமந்துதான் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இந்த மக்களில் பெரும்பாலானவர்கள் இன்னமும் கஷ்டமான நிலைகளுடன் வாழ்கிறார்கள். அரசாங்கம் மட்டுமல்ல, முஸ்லிம் அரசியல்வாதிகளும், சமூகப் பிரமுகர்களும் இவர்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு இனியாவது அக்கறையுடன் செயற்பட முன்வர வேண்டும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# வடக்கிலிருந்து 72 மணித்தியாலங்களுக்குள் 78 ஆயிரம் முஸ்லிம்கள் விரட்டப்பட்டனர்

எஸ்.அருளானந்தன்

2012ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முப்பதாம் திகதியோடு வடமாகாணத்திலிருந்து முஸ்லிம் மக்கள் விரட்டியடிக்கப்பட்டு 22 வருடங்கள் பூர்த்தியாகின்றன. வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களிலிருந்தும் 72 மணித்தியாலத்துக்குள் சுமார் 78 ஆயிரம் முஸ்லிம்கள் வட மாகாணத்துக்கு வெளியே விரட்டப்பட்டார்கள். தமிழ் மக்களின் விடிவுக்காகத்தான் ஆயுதமேந்தினோம் என்று கூறிக்கொண்டவர்கள் தமிழையே தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம்களை ஆயுதமுனையில் விரட்டியது அப்பட்டமான இனச் சுத்தகரிப்பு.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களைக் கொண்டது வட மாகாணம். 1990 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முப்பதாம் திகதி யாழ்ப்பாண நகரத்தை அண்டிய முஸ்லிம் வட்டாரப் பகுதிக்குள் புகுந்த புலிகளின் வாகனங்கள் உறுமின. புலி வாகனங்களில் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கிகள் கீழ்க்கண்டவாறு அலறிக்கொண்டிருந்தன.

“யாழ்.நகரத்தில் வாழும் அனைத்து முஸ்லிம்களும் வட மாகாணத்துக்கு வெளியே செல்ல வேண்டும். உடுத்த உடுப்புடனும், ஐநூறு ரூபாவுக்கு மேற்படாத பணத்துடனும் அனைத்து முஸ்லிம்களையும் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரிக்கு வருமாறு இத்தால் அறிவுறுத்தல் விடுக்கப்படுகிறது. இந்த உத்தரவை மீறி நடப்பவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படும்”- இதுதான் அந்த உத்தரவு.

யாழ்ப்பாணத்துக்கு வெளியே ஏனைய மாவட்டங்களில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறுவதற்கு 48 மணித்தியால அவகாசம் வழங்கப்பட்டது. யாழ்.நகரில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு இரண்டே இரண்டு மணிநேர கால அவகாசமே வழங்கப்பட்டது.

ஒஸ்மானியாக் கல்லூரியில் கூடிய அனைத்து முஸ்லிம்களும் லொறிகளில் ஏற்றப்பட்டு வடமாகாணத்துக்கு வெளியே கொண்டு சென்று விடுவிக்கப்பட்டனர். ஒரு சில முஸ்லிம்கள் எதிர்ப்புக் காட்ட முனைந்தனர். அவர்களுக்கு துப்பாக்கிகள் தூக்கிக் காண்பிக்கப்பட்டன.

யாழ்.நகரத்தை அண்டிய பகுதியில் முஸ்லிம் வட்டாரம் என்று ஒரு தனிப் பகுதி உண்டு. முஸ்லிம் மக்களே அங்கு வாழ்ந்து வந்தனர்.

1981ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி யாழ்.நகரத்தில் மட்டும் வாழ்ந்த முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை 14,844. வட மாகாணத்தின் ஏனைய ஐந்து மாவட்டங்களிலும் சுமார் 78 ஆயிரம் முஸ்லிம் மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர். யாழ்.நகர முஸ்லிம் மக்களை முப்பதாம் திகதி இரண்டு மணி நேரக் கால அவகாசத்தில் வெளியேற்றிய புலிகள், அதற்கு முன்னதாகவே ஏனைய மாவட்டங்களில் வாழ்ந்த முஸ்லிம் மக்களை முப்பதாம் திகதிக்கு முன்னதாகவே வெளியேறுமாறு உத்தரவிட்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து 12 மைல்கள் அப்பாலுள்ள சாவகச்சேரியில் அப்போது சுமார் 1500 பேர் வரையிலான முஸ்லிம் மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர். இவர்களுக்கு அக்டோபர் மாதம் 28ஆம் திகதி 48 மணிநேர அவகாசத்தோடு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டது. இதன் பின்னர்தான் கிளிநொச்சி, மன்னார் உட்பட அனைத்து வடபுல மாவட்டங்களிலிருந்தும் முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

தென்னிலங்கையில் வாழ்ந்து வருகின்ற முஸ்லிம் மக்களைப் போலன்றி வடக்கே வாழ்ந்த முஸ்லிம் மக்களின் பேச்சுமொழி தமிழ்தான். அதுவும் பிரதேசப் பேச்சுவழக்கிலேயே இருந்தது.

வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் விரட்டப்பட்ட காலப் பகுதியையும் முரண்பாட்டு நிலைமைகளையும் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டும். 1987ஆம் ஆண்டு ஜூலை மாத இறுதியில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நிலைகொண்ட இந்தியப் படையினர் 1990ஆம் ஆண்டு மார்ச் முடிவுக்கு முன்னதாகவே வெளியேறிச் சென்று விட்டனர். இந்தியப் படையை வெளியேற்றக் கோரியும், அரச அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்குடனும் தென்னிலங்கையில் ஜே.வி.பி.ஆயுதத் தாக்குதல்களை கட்டவிழ்த்து விட்டிருந்த காலமது.

> “யாழ்.நகரத்தில் வாழும் அனைத்து முஸ்லிம்களும் வடமாகாணத்துக்கு வெளியே செல்ல வேண்டும். உடுத்த உடுப்புடனும், ஐநூறு ரூபாவுக்கு மேற்படாத பணத்துடனும் அனைத்து முஸ்லிம்களையும் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரிக்கு வருமாறு இத்தால் அறிவுறுத்தல் விடுக்கப்படுகிறது. இந்த உத்தரவை மீறி நடப்பவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படும்”- இதுதான் அந்த உத்தரவு.

வடக்கிலும், கிழக்கிலும் நிலைகொண்டிருந்த இந்தியப் படைகளுக்கும் புலிகளுக்குமிடையில் மோதல்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. இந்தியப் படை நிலைகொண்டிருந்த காலகட்டத்தில் காட்டுப் பகுதிக்குள் விரட்டப்பட்டிருந்த புலிகள், இந்தியப் படை வெளியேறிய பின்னர் வடக்கு, கிழக்கில் பெரும் பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர்.

1989ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நாடெங்கும் இடம்பெற்ற வன்செயல்களுக்கு மத்தியில் ஜனவரி 2அம் திகதி ரணசிங்க பிரேமதாச இலங்கை ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டார். இலங்கையின் இரண்டாவது செயலாற்று அதிகாரமிகு ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதுமே சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு ஜே.வி.பிக்கும், புலிகள் இயக்கத்துக்கும் பிரேமதாசா அழைப்பு விடுத்தார். உத்தியோகபூர்வமாக இந்த அறிவிப்பு 1989ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி விடுக்கப்பட்டது. இந்தியப் படையை வெளியேற்றுவதற்காக புலிகளுக்கு பிரேமதாசா நிதியுதவி மற்றும் ஆயுதங்களை வழங்கினார்.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா, புலிகள், ஜே.வி.பி ஆகிய முத்தரப்பினருமே இந்தியப் படையின் வெளியேற்றம் பொது இலக்காக இருந்தது. இந்தியப் படையின் இறுதி அணி 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி இலங்கையை விட்டு வெளியேறியது. இந்தியப் படை வெளியேறிக் கிட்டத்தட்ட மூன்று மாதங்களின் பின்னர் இலங்கை இராணுவத்தின் மீது புலிகள் தாக்குதல்களை ஆரம்பித்தனர். சுமார் 14 மாதங்களாகப் பிரேமதாசா அரசாங்கத் தரப்பினருக்கும் புலிகளுக்குமிடையில் இடம்பெற்றுவந்த சமாதானப் பேச்சுவார்த்தையும் இடைநடுவில் முறிந்தது. 1990ஆம் ஆண்டு ஜூன் பத்தாம் திகதி புலிகள் இரண்டாவது ஈழப்போரை ஆரம்பித்தபோது வடக்கு கிழக்கில் பெரும் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

1980களின் நடுப்பகுதியில் புலிகள் இயக்கத்துடனும் ஏனைய தமிழீழ விடுதலைக் குழுக்களுடனும் இணைந்து சில முஸ்லிம் வாலிபர்களும் செயற்பட்டு வந்திருக்கிறார்கள். 1981ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது.

இலங்கை வாழ் முஸ்லிம்கள் ஒரு தனியான தேசிய இனமென்ற கோரிக்கை இதன் பின்னர் வலுவடையத் தொடங்கியது. அத்துடன் புலிகளின் தனித் தமிழீழக் கோரிக்கையை முஸ்லிம் காங்கிரஸ் வலுவாக எதிர்த்தது. முஸ்லிம்களுக்கான சுயாட்சிப் பிரதேசக் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. காலப்போக்கில் இலங்கை அரசின் ஊர்க்காவல் படைகளில் முஸ்லிம் இளைஞர்கள் உள்வாங்கப்பட்டனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்குப் பின்னால் முஸ்லிம்கள் அணிதிரளத் தொடங்கினர்.

வடக்கிலிருந்து முஸ்லிம் மக்களை விரட்டுவதற்கு முன்னதாகவே கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கு எதிராகப் புலிகளும், அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராக முஸ்லிம் காடையர்களும், ஊர்க்காவல் படையில் இணைந்திருந்த சில முஸ்லிம்களும் வன்செயல்களைக் கட்டவிழ்த்து விட்டனர். வன்செயல்களைப் புலிகள் கட்டவிழ்த்து விட்டிருந்தனர். 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி கிழக்கில் காத்தான்குடியிலுள்ள இரண்டு பள்ளிவாசல்களுக்குள் வைத்து 140 முஸ்லிம்களைப் புலிகள் சுட்டுக்கொன்றனர். அன்று ஒரு வெள்ளிக்கிழமை காத்தான்குடி ஹுசைனியா பள்ளிவாசலுக்குள்ளும் மீரா ஜும்மாப் பள்ளிவாசலுக்குள்ளும் ஆயுதபாணிகளாகப் புகுந்த புலிகள் தொழுது கொண்டிருந்த அப்பாவி முஸ்லிம்களைச் சுட்டுக் கொன்றனர். இத் தாக்குதலின்போது சுமார் 70 முஸ்லிம்கள் காயங்களுக்கு இலக்கானார்கள்.

இக் கொடூரம் இடம்பெற்றுச் சரியாக ஒன்பது நாட்களுக்குப் பின்னர் மற்றொரு இரத்த வேட்டையைப் புலிகள் நடத்தினார்கள். ஏறாவூர், பிச்சிநகர் என்ற முஸ்லிம் கிராமத்துக்குள் ஆயுததாரிகளாகப் புகுந்த புலிகள் 118 முஸ்லிம் மக்களைச் சுட்டும் வெட்டியும் கொன்றனர். இந்த ஈனத்தனமான நடவடிக்கையின் போது கொல்லப்பட்டவர்களில் 51 பேர் ஆண்கள், 36 பேர் பெண்கள், 31 பேர் பிள்ளைகள்.

(7ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கிலிருந்து 72 ஆயி...

நகைகளையும் பெறுமதி வாய்ந்த பொருட்களையும் கூடப் புலிகள் கொள்ளையடித்துச் சென்றனர்.

"யாழ்.நகரத்தில் வாழும் அனைத்து முஸ்லிம்களும் வட மாகாணத்துக்கு வெளியே செல்ல வேண்டும். உடுத்த உடுப்புடனும், ஐநூறு ரூபாவுக்கு மேற்படாத பணத்துடனும் அனைத்து முஸ்லிம்களையும் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரிக்கு வருமாறு இத்தால் அறிவுறுத்தல் விடுக்கப்படுகிறது. இந்த உத்தரவை மீறி நடப்பவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படும்"- இதுதான் அந்த உத்தரவு.



மட்டக்களப்பு - பொலநறுவை வீதியில் ஏறாவூர் அமைந்துள்ளது. மட்டக்களப்பிலிருந்து ஒன்பது மைல்கள் அப்பால் ஏறாவூர் உள்ளது. பிச்சி நகர்ப் படுகொலை ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி நடைபெற்றது.

1990ஆம் ஆண்டு கிழக்கில் சுமார் ஐநூறுக்கு மேற்பட்ட முஸ்லிம்களைப் புலிகள் சுட்டுக் கொன்றனர். அந்த வருடம் ஜூலை மாதம் முப்பதாம் திகதி அக்கரைப்பற்றில் 14 முஸ்லிம்கள் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஆகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி அம்பாறை, முள்ளியன்காடு என்ற கிராமத்தில் வயல்வெளியில் வேலை செய்து கொண்டிருந்த 17 முஸ்லிம் விவசாயிகளைப் புலிகள் சுட்டுக் கொன்றனர். மறுநாள் ஆறாம் திகதி அம்பாறை, அரந்தலாவைக்கு அருகேயுள்ள முஸ்லிம் கிராமமொன்றுக்குள் புகுந்த புலிகள் ஒன்பது முஸ்லிம்களைச் சுட்டுக் கொன்றனர். இவற்றை விடவும் மேலும் பல படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி இடம்பெற்ற காத்தான்குடிப் பள்ளிவாசல் படுகொலைக்கு முன்னதாக 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் திகதி வீரமுனை, வளத்தாப்பிட்டி, வீரஞ்சோலை போன்ற தமிழ்க்கிராமங்கள் படையினராலும், முஸ்லிம் ஊர்க்காவல் படை வீரர்களாலும் சுற்றிவளைக்கப்பட்டன. இவர்கள் அனைவரும் வீரமுனைக் கோயிலடிக்குச் செல்லுமாறு உத்தரவிடப்பட்டனர். அங்கு சென்றவர்களில் 56 ஆண்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அவர்களுக்கு என்ன நடந்ததென்று இன்றுவரை தெரியாது. சம்மாந்துறை மலைக்காட்டுக்குள் தீப்பற்றி எரிந்ததும், பிண வாடை வீசியதும் மட்டும்தான் தெரியும். மீண்டும் ஜூன் மாதம் 29ஆம் திகதி வீரமுனைக் கிராமம் சுற்றிவளைக்கப்பட்டது. ஐம்பதுக்கு மேற்பட்ட தமிழர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். இவர்களுக்கு என்ன நடந்ததென்று இன்றுவரை தெரியாது.

காரைதீவுப் பாடசாலை உயிருக்குப் பயந்தோடிய தமிழ் மக்களின் அகதி முகாமாக இருந்தது. 1990ஆம் ஆண்டு ஜூலை மாதம் நான்காம் திகதி 12 தமிழ் வாலிபர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். இவர்கள் அனைவரும்

காணாமல் போனோரின் பட்டியலுக்குள் கண்டுபிடிக்கப்பட்டார்கள். பெயர்கள்தான் கண்டு பிடிக்கப்பட்டனவேயொழிய ஆட்கள் இன்று வரை கண்டுபிடிக்கப்படவில்லை.

அப்பாவித் தமிழ் மக்களின் சோகக் கதைகளுக்குச் சொந்தம் கொண்டாடிய எத்தனையோ தமிழ்க் கிராமங்கள் கிழக்கில் இருக்கின்றன. மல்வத்தை, கலைதிபுரம், புதுநகர் என்று பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

கொக்கட்டிச்சோலை, மைலந்தன்னை போன்ற கிழக்கின் தமிழ்க் கிராமங்களும் சுடுகாடுகளாக்கப்பட்டன. அக்கிரமக்காரர்களும், வேட்டை நாய்களும் அனைத்து இனங்களிலுமே உள்ளனர். கிழக்கின் எல்லைக் கிராமங்களில் அப்பாவிச் சிங்கள மக்களை வேட்டையாடிய தமிழ் சூரப் புலிகளும் இருக்கிறார்கள். இனவெறி மனிதர்களை வழிநடத்தியதால் ஏற்பட்ட கோரங்கள் இவை.

இனவெறியர்களின் அட்டகாசங்களுக்கு அதிகம் பலியானவர்கள் அப்பாவித் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள்தான்.

அப்பாவி முஸ்லிம்களைப் புலிகள் மிரட்டி, விரட்டியது அப்பட்டமான இனச் சுத்திகரிப்பு. கிழக்கு மாகாணக் கிராமங்களில் வாழ்ந்த அப்பாவித் தமிழ் மக்கள் 'ஜிகாத்' நடத்த முனைந்த முஸ்லிம் காடையர்களால் வேட்டையாடப்பட்டார்கள். இதேவேளை ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் அரசாங்கம் கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதில் முனைப்பாக இருந்தது. மாதுறு ஓயா, யான் ஓயா, மல்வத்து ஓயா என்ற சிங்களப் பெயர்களுடன், தமிழ்க் கிராமங்களில் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மகாவலி அபிவிருத்தி அமைச்சு இந்தச் சிங்களக் குடியேற்றத் திட்டங்களை முனைப்பாய மேற்கொண்டது.

திம்புலகால பௌத்த பிக்கு சீலாலங்காய் தேரர் இடங்களிலிருந்து சிங்கள மக்களை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான லொறிகளில் ஏற்விவந்து கல்குடா தொகுதி போன்ற தமிழ்க்கிராமங்களில் குடியேற்றினர். இது அப்போது ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசில் அமைச்சராகவிருந்த கே. டபிள்யு. தேவநாயகத்துக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்படாவிட்டால் அரசாங்கத்தை விட்டு வெளியேறப் போவதாக ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவைச் சந்தித்து அமைச்சர் தேவநாயகம் எச்சரிக்கையும் விடுத்தார்.

மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற தமிழ்ப் பிரதேசங்களின் நிலத் தொடர்பைத் துண்டிப்பதற்காக 40 ஆயிரம் சிங்களவர்கள் மாதுறு ஓயாவில் குடியேற்றப்பட்டனர். 1980களின் நடுப்பகுதியில் இது இடம்பெற்றது. மகாவலி அபிவிருத்தி அதிகார சபையில் அன்று சிரேஷ்ட அதிகாரியாகப் பதவி வகித்த மாலிங்க எச். குணரட்ன என்பவர் ஏழதிய 'FOR SOVEREIGN STATE' என்ற ஆங்கில நூலில் இந்த உண்மையாகத் துலாம்பரமாகச் சுட்டிக்காட்டியுள்ளார். "மாதுறு ஓயாவில் 40 ஆயிரம் சிங்கள மக்களைக் குடியேறச் செய்த நடவடிக்கையை எம்மில் சிலர் தீர்மானித்து அமுல்படுத்தினோம்" என்று மாலிங்க குணரட்ன தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஒருபுறம் ஜே.ஆர். அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதே வேளை கிழக்கிலுள்ள பல தமிழ்க் கிராமங்களுக்குள் புகுந்து படையினரும், முஸ்லிம் ஊர்க்காவல் படை வீரர்களும் இணைந்து அப்பாவித் தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். ஆயுத மோதலில் ஈடுபட்ட சகல தரப்பினரும் அப்பாவி மக்களையே வேட்டையாடினார்கள்.

ரணசிங்க பிரேமதாசாவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துடன் 14 மாதங்களாகப் பேச்சு வார்த்தை நடத்திய புலிகள், கிழக்கிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களையும் கைப்பற்றி அறுநூறுக்கு மேற்பட்ட பொலிஸ் காரர்களைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களில் தமிழ் பொலிஸ்காரர்களை மட்டும் விடுவித்து விட்டு ஏனையவர்களைச் சுட்டுக் கொன்றனர்.

வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் விரட்டப்படுவதற்குச் சில மாதங்கள் முன்னதாக வடபகுதியைச் சேர்ந்த 35 முஸ்லிம் வர்த்தகர்களைப் புலிகள் கடத்திச் சென்றனர். கப்பம் கோரியே இவர்கள் கடத்தப்படனர். இவர்களில் கப்பம் வழங்கிய 18பேர் சில மாதங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். ஏனைய 17 பேருக்கும் என்ன நடந்ததென்ற மர்மம் இன்றுவரை மூடுமந்திரமாகவே இருக்கிறது.

வடக்கிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம் மக்கள் புத்தளம், அநுராதபுரம், குருநாகல் உட்படப் பல தென்னிலங்கைப் பகுதிகளில் 150இற்கும் மேற்பட்ட அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்தனர். 22 வருடங்கள் கழிந்துவிட்ட இன்றைய நிலையில் அந்த மக்கள் தமது சொந்த வாழ்விடங்களில் முற்றுமுழுதாக மீள்குடியேற்றப்படவில்லை என்ற நிலைமை தொடரத்தான் செய்கிறது. கிழக்கிலங்கையில் அன்றைய யுத்தச் சூழ்நிலையில் "ஜிகாத்" நடத்த முயன்ற சில முஸ்லிம் வெறியர்கள் அப்பாவித் தமிழர்களை வேட்டையாடினார்கள் என்ற உண்மையையும் மறுதலிக்க முடியாது. இன, மதரீதியான கோர முகத்துடன் ஜிகாத்துக்களைத் தலையெடுக்காமல் தடுத்த நல்லெண்ணம் கொண்ட தலைவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

கிட்டத்தட்ட மூன்று தசாப்த காலமாக நடைபெற்ற இந்த மோதலில் படையினரிலும் புலிகளிலும் பார்க்க அப்பாவி மக்களின் உயிர்களே பெருமளவுக்குப் பலியெடுக்கப்பட்டன. புலிகள் முஸ்லிம் மக்களை மட்டுமல்ல, எல்லைக் கிராமங்களிலுள்ள சிங்களக் கிராமங்களுக்குள் புகுந்து அபிபாவிச் சிங்கள மக்களை வகை தொகையின்றி கொன்றிருக்கின்றார்கள். அதேபோன்று கொக்கட்டிச்சோலை, மைலந்தன்னை, வவுனியா உட்படப் பல்வேறு தமிழ்ப் பிரதேசங்களிலும் நூற்றுக்கணக்கில் அப்பாவித் தமிழ் மக்கள் இராணுவத்தால் நரவேட்டையாடப்பட்டிருக்கின்றார்கள்.



இவற்றில் முஸ்லிம் ஊர்காவல் படை வீரர்களும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். யுத்தம் பெருமளவில் காவுகொண்டது அப்பாவிகளைத்தான்

சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடின்றி இனவெறியர்கள் சிலரின் நடவடிக்கைகளால் கொல்லப்பட்ட மக்கள் அதிகம். அவர்கள் அப்பாவி மக்களுக்குள் பாய்ச்சிய இனவாதம் இன்றுவரை அரசியல்வாதிகளால் பயன்படுத்தப்படுகிறது. சர்வதேசங்களால் பயன்படுத்தப்படுகின்றது. இன்றுவரை தீர்க்கப்படாத இனப் பிரச்சினையால் இலங்கை கண்ணீரில் மிதக்கிறது.




இரண்டாம் உலக போர் நடந்து முடிந்த சமயம் போர் முடிந்து உலகில் அமைதி திரும்பிக் கொண்டிருந்தாலும் அந்தப் போரில் ஈடுபட்ட லட்சக் கணக்கானோர் வாழ்வில் அமைதி திரும்பவில்லை. காரணம் போரினால் அவர்கள் மனது மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு இருந்தது. கமராவிலிருந்து வரும் வெளிச்சம் கூட அவர்களுக்கு குண்டு வீச்சினால் ஏற்படும் வெளிச்சத்தை ஞாபகப்படுத்தியது. மின்னல் வெட்டும் ஒளியைப் பார்த்தால் அவர்களது மனம் பயத்தால் நிரம்பி வளிந்தது. இடி இடிக்கும் ஓசையை கேட்டால் அவர்கள் தங்கள் வீட்டில் குண்டு விழுவதாக நினைத்துக் கொண்டு திடீரென கீழே படுத்துவிடுவார்கள் மொத்தத்தில் போர் முடிந்த பின்னரும் அவர்களின் மனம் இன்னும் போரிலேயே இருந்தது. அவர்களால் அதிலிருந்து மீள முடியவில்லை. மருந்து மாத்திரையால் பயன் இல்லை. அரசாங்கத்திற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அப்பொழுதுதான் அவர்களுக்கு உதவி செய்ய ஹிப்னாடிஸ்ட் முன்வந்தார்கள்.

மனதளவில் பாதிக்கப்பட்ட வீரர்களை தேர்வு செய்து அவர்களது மனதை ஆழ்நிலை உறக்கத்திற்கு கொண்டு சென்று அவர்களது மனதுடன் பேசத் தொடங்கினார்கள். சில நம்பிக்கையான வார்த்தைகளின் மூலம் அவர்களின் மனதுக்கு போர் முடிந்த நிலையையும் இப்போது இருக்கும் நிலையையும் விளக்கி அவர்கள் மனதை நம்ப செய்தார்கள். இப்படி ஒரு சில வாரங்கள் தொடர்ந்த சிகிச்சை மூலம் வீரர்கள் தங்கள் பழைய நிலையை அடைந்தார்கள். அது வரை பொதுமக்களால் பெரிய அளவில் அங்கிகரிக்கப்படாத மெஸ்மரிச மற்றும் ஹிப்னாடிச கலைகள் மக்களிடையே பிரபலமடைய தொடங்கியது..

ஒரு சிலருக்கு தங்களது சிறுவயதில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்கள் அவர்கள் மனதில் பெரிய பாதிப்பை ஏற்படுத்திவிடும் அதன் மூலம் அவர்களின் குணங்களும் மாறிவிடும்... சிறுவயதில் தாயாரின் தவறான நடத்தையில் பாதிக்கப்படும் குழந்தைகள் நாளடைவில் பெண்களையே வெறுக்கத் தொடங்கிவிடுவார்கள்.. இப்படிப்பட்டவர்களுக்கு கல்யாண வாழ்க்கை என்றாலே வெறுப்பாக இருக்கும்.. இவர்களை ஹிப்னாடிச சிகிச்சை மூலம் சரி செய்துவிடலாம். இதே போல் ஏராளமான மக்கள் மனதளவில் பாதிக்க பட்டு வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள்..

நாம் வாழும் இந்த உலகம் ஒரு விஞ்ஞான உலகம். அதுவும் முறையாக சுவாசிக்கக்கூட முடியாத ஒரு அவசர உலகம். இந்த உலகத்தில் நம்முடைய அவசரத்தின் காரணமாகவோ அலட்சியத்தின் காரணமாகவோ பல அரிய விஷயங்களை பொக்கிஷங்களை வீணடித்துவிட்டோம். சிந்திக்கக்கூட நேரம் இல்லாத இந்த உலகத்தில் நாம் உணரத் தவறிய ஒரு ஒரு பொக்கிசம் தான் இந்த மெஸ்மரிசம்.

இதை கண்டுபிடித்தது ஜெர்மனியில் டாக்டர் பட்டம் பெற்ற மெஸ்மர் ஆவார். மெஸ்மரால் கண்டுபிடிக்கப்பட்டதால் இது மெஸ்மரிசம் என அழைக்கபடுகின்றது. இவர் இதை அறிமுகப்படுத்தும்போது மக்கள் கலிலியோவுக்கு செய்த (அவ)மரியாதையை எல்லாம் இவருக்கும் செய்தனர். மெஸ்மரிசம் என்பது எல்லோரும் நினைப்பது போன்று கண்கட்டு வித்தையோ அல்லது மாயாஜாலமோ கிடையாது. மனிதனிடம் இயற்கையாகவே உள்ள பிரபஞ்ச சக்தியை கொண்டு அதை தனக்கு சாதகமாக பயன்படுத்துவதைத்தான் மெஸ்மரிசம் என்கின்றோம். இதை எல்லோரும் செய்யமுடியுமா என்றால் முடியும் என்பதே பதில்.

மெஸ்மரிசத்தை அடுத்தவருக்கு பயன்படுத்துவதை காட்டிலும் முதலில் தனக்கு பயன்படுத்துவதே சாலச் சிறந்தது. ஏன் என்றால் முதலில் அதன் பலனை நீங்கள் உணர வேண்டும். அப்பொழுது தான் அடுத்தவருக்கு செய்யும் போது உங்களுக்கு தன்னம்பிக்கையும் முழு ஈடுபாடும் கிடைக்கும்.

# சிறந்த மனோபாவமுள்ள மனித வளமே நிறுவனங்களுக்கு அவசியம்

நிறுவனங்களில் பல்வேறு விதமான வளங்கள் காணப்படுகின்றன. அவ் வளங்களில் மிகவும் இன்றியமையாத வளமாக மனித வளம் காணப்படுகின்றது. நிறுவனங்களின் தொடர்ச்சியான, நிலையான செயற்பாட்டிற்குத் தேவையான மனிதவளமானது பெரும்பாலானோர் எண்ணுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கையல்ல. ஊழியர்களும் எண்ணிக்கையின் அடிப்படையில் மனித வளத்தினை மதிப்பிட முடியாது. மனித வளம் என்பது ஆழமான கருத்தினைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

இதன் உண்மையான கருத்தினை பேராசிரியர் லியொன் ஊ. மக்கின்சன் (USA) என்பவர் பின்வருமாறு வரையறுக்கின்றார். "மனித வளம் தொடர்பாக தெளிவாக குறிப்பிடக்கூடிய போதுமான வரைவிலக்கணம் இல்லாவிடினும். நிருவனத்தினுடைய தொழிலாளர்களின் கூட்டுமொத்தமான அறிவு திறமைகள், உருவாக்கக் கூடிய திறன்கள் (Creative Abilities),உளச்சார்பு (Aptitutes) மற்றும் உள்வாங்கப்பட்டிருக்கும் தனிப்பட்டோரின் பெருமானங்கள் (Values) மனோபாவங்கள் (Attitudes) மற்றும் நம்பிக்கைகள் (Beliefs) போன்றவைகளை உள்ளடக்கியது எனலாம். தொழிலுக்கு அமர்த்தப்பட்ட ஆட்களின் திறமையினாலும், ஆற்றலினாலும் வெளிப்படுத்தப்படும் திறன்கள், அறிவு, திறமைகள் போன்றவற்றின் கூட்டுத் தொகை எனலாம்". (Megginson as in Niyas 1994)

இவ் வரைவிலக்கணமானது நிறுவன தொழிலாளர்களின் அறிவு,திறமைகள் மட்டுமல்லஅவர்களின் பெறுமதிகள், மனோபாவம், நம்பிக்கைகள் போன்றவற்றை உள்ளடக்கிய பாரிய விளக்த்தினை மனித வளத்துக்கு கொடுப்பதை எமக்கு உணரமுயும்.

அப்படியானால் நமது நிறுவனங்களின் நிலைப்பாடு என்ன? எப்படிப்பட்ட தொழிலாளர்கள் எம்மிடம் காணப்படுகின்றனர்? இவர்களிடமிருந்து நிறுவனம் அதனுடைய இலக்கினை அடைய முடியுமா? தொழிலாளர்களிடம் உயர் பட்டங்கள் இருப்பது மட்டும் நிறுவனத்திற்கு வெற்றியளிக்குமா? ஏன் எமத நிருவனங்கள் தொழிலாளர்களிடமிருந்து உண்மையான பொறுப்புணர்ச்சியினை, தியாகத்தினை, அர்ப்பணிப்பினை நிறுவனத்திற்காக செய்யத் தயாரில்லை?

அவ்வாறெனின் நமது நிறுவனங்களில் காணப்படும் தொழிலாளர்கள் எப்படிப்பட்டோர்? இன்று இவை நிறுவன சூழலில் எழுப்பப்படும் வினாக்களாகும்.

நமது நிறுவனங்கள் அதன் இலக்கினை அடைய முடியாமல் தள்ளாடுகின்றன. எல்லா நிறுவனங்களிலும் பிரச்சினைகள், முரண்பாடுகள், ஊழல்மோசடிகள், பொடுபோக்கு, அசமந்தபோக்கு, பக்கச்சர்பு, அர்ப்பணிப்பின்மை, முறையற்ற குழுக்களின் தோற்றம் போன்றவை அன்றாடம் நாம் காணும் காட்சிகள் எனலாம்.

இவற்றிலிருந்து நிறுவன இலக்கினை, சமூக பொறுப்பினை அடைய நிறுவனங்களுக்கு எப்படிப்பட்ட தொழிலாளர்கள் அவசியம், நிறுவனங்களுக்கு கல்வித்தகமை மட்டுமல்ல நல்ல மனோபாவமும் உள்ள ஊழியர்களே பொருத்தமாக காணப்படுகினறனர்.

ஆட்களைக் தெரிவுசெயய்தல் என்பது சரியான அனுபவம் உள்ளோரைக் கண்டுபிடிப்பது என்பது அல்ல.


மாறாக சரியான உள்ளம் உள்ளோரைக் கண்டுபிடிப்பதேயாகும். (Swaminathan-1998). அவர் மேலும் குறிப்பிடும் போது, ஒருவரைத் தெரிவு செய்தபின் அவரை மாற்ற நீர் நினைத்தால் மிகப் பெரிய ஆச்சரியமானதாகவும், பிரச்சினையானதாகவும் இருக்கும்.

நிறுவனங்கள் தெரிவு செய்ய முன்பே விண்ணப்பதாரிகளின் குணம்,நடத்தைகள், மனோபாவம் என்பவற்றை அறிவதில் கவனம் செலுத்துவது அதன் செயற்திறனான செயற்பாட்டுக்குஉதவும். இவ்வாறான அம்சங்களைக் கொண்ட சரியானஆட்களைக் கண்டுபிடிப்பது நிறுவன முகாமையின் பொறுப்பாகும்.

**மனோபாவம் (Attitudes) என்றால் என்ன?**

மனோபாவம் என்பது சில நோக்கங்களை அடையும் நோக்கில் ஒருவரிடம் காணப்படும் சாதகமான அல்லது பாதகமான உணர்வினையே குறிக்கின்றது. (Dessinmone>et.al 2002). ஒருவரிடம் ஏற்படும் இந்த சாதகமான பாகமான உணர்வுகளே சிறந்த மனோபாவமாகவும் (Positive Attitudes) மோசமான மனோபாவமாகவும் (Negative Attitudes) தோற்றம் பெற்று நடைமறையில் வெளிக்காட்டப்படுகின்றது.சிறப்பான

**சரியான ஆட்கள் நிறுவனத்தின் பிரதான பெறுமானங்களுக்கு (Core Values) பொருந்தக் கூடியதாக இருப்பர். ஆட்கள் சேர்க்கும் போது நிறுவனத்தின் பிரதான பெறுமானங்களுக்கு இணைந்து செயற்படக் கூடியோரையே தெரிவு செய்ய வேண்டும். சரியான ஆட்களை இறுக்கமாக முகாமை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. நீர் ஒருவரை இறுக்கமாக மேற்பார்வை செய்ய வேண்டி இருப்பின் அது உன்னுடைய ஆட்சேர்த்தலில் மேற்கொள்ளப்பட்ட தவராக இருக்கும், வழிகாட்டப்பட வேண்டும், படிப்பிக்கப்பட வேண்டும். ஆம், ஆனால் இறுக்கமாக மேற்பார்வை செய்யப்படக்கூடாது. உம்மிடம் சரியான ஆட்கள் இருப்பின் அவர்கள் தாமாகவே ஊக்கப்படுத்தப்பட்டோராகவும், தாமாகவே ஒழுக்கமுள்ளோராகவும். சிறந்ததை அடைய விரைந்து செயற்படக்கூடியோராகவும் இருப்பர். சரியான ஆட்கள் எம்மிடம் "தொழில்கள். (Jobs) இல்லை. எம்மிடம் பொறுப்புகள் (Responsibilities) உள்ளன என புரிந்து கொள்வர். சரியான ஆட்கள் அவர்கள் அடைய வேண்டிய இலக்குகளின் பட்டியலுக்கு (Tasks List), அவர்களின் உண்மையான பொறுப்புக்களுக்கும் இடையேயான வேறுபாட்டை தெளிவாக எடுத்துக் கொள்வர்.**



மனோபாவம் உள்ளவர் நற்சிந்தனை, விருப்பம், ஆர்வம் ஆகிய நற்பண்புகளைக் கொண்டவராக காணப்படுவார்.

**மனோபாவம் (Attitudes) என்றால் என்ன?**

மனோபாவம் என்பது சில நோக்கங்களை அடையும் நோக்கில் ஒருவரிடம் காணப்படும் சாதகமான அல்லது பாதகமான உணர்வினையே குறிக்கின்றது. (Dessinmone>et.al 2002). ஒருவரிடம் ஏற்படும் இந்த சாதகமான பாகமான உணர்வுகளே சிறந்த மனோபாவமாகவும் (Positive Attitudes) மோசமான மனோபாவமாகவும் (Negative Attitudes) தோற்றம் பெற்று நடைமறையில் வெளிக்காட்டப்படுகின்றது. சிறப்பான மனோபாவம் உள்ளவர் நற்சிந்தனை, விருப்பம், ஆர்வம் ஆகிய நற்பண்புகளைக் கொண்டவராக காணப்படுவார்.

சுனில் திசாநாயக்க (1998) பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "நாம் ஆட்களைச் சேர்கரும் போது யார் அவர்கள் அவர்களுக்கு என்ன தெரியும் என்பவை முக்கியத்துவம் குறைந்ததாகவே உள்ளது. நாம் சிறந்த மனோபாவத்திற்காக ஆட்களைச் சேர்த்து திறமைகளுக்காக பயிற்சி வழங்குகின்றோம். (We hire for Attitudes and train for skills)'

வேகமாக மாறும் இவ்வியாபாரச் சூழலில் சிறந்த மனோபாவம் உள்ள ஊழியர்கள் மிகவும் இன்றியமையாதவர்களாக உள்ளனர். ஒரு நிறுவனம் சிறப்பாக செயற்பட வேண்டுமாயின் அந் நிறுவன ஆட்கள் அவர்களின் தொழிலில் மகிழ்ச்சியாக இருப்பதுடன் அவர்கள் தாம் பெறுமதியான பங்காளிகள் என எண்ணக்கூடிவர்களாக இருக்க வேண்டும். (பெரேரா.2002).

ஊழியர்கள் அவர்கள் வேலை செய்யும் நிறுவனத்தை தமது நிறுவனம் போன்று எண்ணி செயற்பட வேண்டும். இன்று எமது சூழலில் ஏனோ தானோ என்று செயற்படும் ஊழியர்களையே பெரிதும் காண்கின்றோம். தனியார் நிறுவனங்களை விட அரச நிறுவன ஊழியர்களில் பெரும்பாலானோர் மோசமான மனோபாவம் உள்ளவர்களாகவே உள்ளனர். இந்நிலை மாற்றப்படுவதே நிறுவன வெற்றிக்கு வழிகோலுதலாக உள்ளது.

பின்வருமாறு நபி (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். "நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள், உங்கள் பொறுப்பு பற்றி விசாரிக்கப்படும். (அல்ஹதீஸ்)

குடும்பத் தலைவர்கள் குடும்பத்துக்கு பொறுப்பு, ஊழியர்கள் நிறுவனத்திற்குப் பொறுப்பு, அரசர்கள் நாட்டுக்கு பொறுப்பானவர்களாக உள்ளனர் என்பதனையே மேலே உள்ள பொன்மொழி குறிப்பிடுகின்றது. எனவே ஊழியர்கள் தங்களது தொழிலை பொறுப்பாக நினைத்து செயற்படக் கூடிவராக இருப்பது இன்றியமையாததாகும்.

தொழிலாளர் உற்பத்தி திறனை (Labour Productivity) பாதிக்கும் மிக முக்கிய காரணங்களில் ஒன்றாக மோசமான மனோபாவம் காணப்படுகின்றது. "இலங்கையில் ஊழியர் உற்பத்தி திறனையும் மொத்தமாக காரணி உற்பத்தி திறனையும் முன்னேற்றுவதற்காக மனித வள அபிவிருத்தி தந்திரோபாயங்கள்" (Human Resource Development Strategies) என்னும் ஆய்வில் தோராதெனிய (2000), குறைவான ஊழியர்கள் உற்பத்தித் திறனுக்காக சுட்டிக்காட்டும் காரணிகளை பற்றி குறிப்பிடும் போது,

1. **பற்றாக்குறையான அறிவு, திறமைகள் மற்றும் தொழிலாளர் செயற்றிறன்.**
2. **மோசமான மனோபாவம்.**
3. **பற்றாக்குறையான அர்ப்பணிப்பு,தியாகம், ஊக்கபப்படுத்தல்.**
4. **பற்றாக்குறையான ஒழுக்கவியல்.**
5. **உயர் வரவின்மை, களைப்பு.**
6. **நேரம் வீணாக்கப்படுதல், ஊழியர் ஓய்வாக இருத்தல், அனாவசியமாக காத்துக் கொண்டிருத்தல்)**
7. **மனிதவள முயற்சிகள் வீணாக்கப்படல். (தேவையற்ற வேலை, மேலதிகமான நிராகரிப்புக்கள்...)**
8. **மனிதவளத் திறமைகள் வீணாக்கப்படல். (பொருத்தமற்ற தேர்வு செய்தல் செய்முறைகள், முறையற்ற வேலைக்கமர்த்தல் போன்றவை).**

போன்ற பல விடயங்களைக் குறிப்பிடுகிறார். இங்கு மோசமான மனோபாவம். (Nagative Attitudes) குறைவான ஊழியர் உற்பத்தித் திறனுக்கு காரணமாக அமைவதைக் காணமுடியும்.

Collins (2006) என்பவர் "ஆட்கள் உம்முடைய மிக முக்கியமான சொத்து அல்ல சரியான ஆட்களே" எனும் தலைப்பிலான தனது ஆய்வில் சரியான ஆட்கள் எவ்வாறு காணப்படுவர் என்பதைப் பின்வருமாறு குறிப்படுகிறார்.

1.சரியான ஆட்கள் நிறுவனத்தின் பிரதான பெறுமானங்களுக்கு (Core Values) பொருந்தக் கூடியதாக இருப்பர். ஆட்கள் சேர்க்கும் போது நிறுவனத்தின் பிரதான பெறுமானங்களுக்கு இணைந்து செயற்படக் கூடியோரையே தெரிவு செய்ய வேண்டும்.

2. சரியான ஆட்களை இறுக்கமாக முகாமை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. நீர் ஒருவரை இறுக்கமாக மேற்பார்வை செய்ய வேண்டி இருப்பின் அது உன்னுடைய ஆட்சேர்த்தலில் மேற்கொள்ளப்பட்ட தவராக இருக்கும், வழிகாட்டப்பட வேண்டும், படிப்பிக்கப்பட வேண்டும். ஆம், ஆனால் இறுக்கமாக மேற்பார்வை செய்யப்படக்கூடாது. உம்மிடம் சரியான ஆட்கள் இருப்பின் அவர்கள் தாமாகவே ஊக்கப்படுத்தப்பட்டோராகவும், தாமாகவே ஒழுக்கமுள்ளோராகவும்.சிறந்ததை அடைய விரைந்து செயற்படக்கூடியோராகவும் இருப்பர்.

3.சரியான ஆட்கள் எம்மிடம் "தொழில்கள்" (Jobs) இல்லை. எம்மிடம் பொறுப்புகள் (Responsibilities) உள்ளன என புரிந்து கொள்வர். சரியான ஆட்கள் அவர்கள் அடைய வேண்டிய இலக்குகளின் பட்டியலுக்கு (Tasks List) , அவர்களின் உண்மையான பொறுப்புக்களுக்கும் இடையேயான வேறுபாட்டை தெளிவாக எடுத்துக் கொள்வர்.



4.சரியான ஆட்கள் செயற்பாடுகள் முறையாக அடையப்படுமாக இருந்தால், அவர்களுக்கு அன்றி அதற்கு காரணமான காரணிகளுக்கு அந்தப் பாராட்டு கொடுக்கப்பட வேண்டும் என்பதை சுட்டிக் காட்டுவர். மாறாக, செயற்பாடுகள் மோசமாக இருப்பின், அத்தோல்விக்காக சூழ்நிலையினையோ அல்லது ஏனைய ஆட்களையோ குற்றம்சாட்டமாட்டார்கள். அவர்கள் "நான் தான் பொறுப்பு" எனச் சுட்டிக் காட்டுவர்.

5.சரியான ஆட்கள் நிறுவனத்திற்காகவும், அதனுடைய செயற்பாடுகளுக்கும் பெருமளவான ஆர்வத்தினைக் கொண்டிருப்பர். ஆர்வம், அர்ப்பணிப்பு இன்றி பாரியளவில் எதுவும் அடையப்படமுடியாது. சரியான ஆட்கள் நிறுவத்திற்காக குறிப்பிட்டுக் காட்டக்கூடிய ஆர்வத்தினை காட்டுவர். நிறுவனத்துக்காக உமக்கு ஆர்வமாக செற்பட முடியாவிடின் பின் நீர் அங்கிருந்த வெளியேறுவதே சிறப்பானதாகும்.

இவரின் ஆய்வின் மேற்குறிப்பிட்ட அம்சங்கள் நிறுவன ஊழியர்கள் எந்தளவு சிறப்பான தன்மைகளைக் கொண்டோராக இருக்க வேண்டும் என்பதை தெளிவாக சுட்டிக்காட்டுகிறது.

தற்காலத்தில் நமது சூழலில் உயர்பட்டங்கள் பெற்ற பட்டதாரிகளிடமாவது இச்சிறந்த மனப்பான்மை, நற்குணங்கள் காணப்படுகின்றனவா என்றால் அதுவும் கேள்விக்குறியாவே உள்ளது. இலங்கையில் ஊழியர்களுக்கிடையே இஸ்திரமான வேலைப் பெறுமானங்கள் (Strong Work Values) குறைவாகவே உள்ளன. (Ranasinghe-1996 as in Fonseka-2001).

"இலங்கையில் மனித வள முகாமைப் பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்பு எவ்வாறு உள்ளது". எனும் தலைப்பில் சேனாரத்ன (2004) என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தொழில் கொள்வோர் மனித வள முகாமைப் பட்டதாரிகளிடம் எதிர்பார்க்கும் அறிவு திறமைகள் மட்டுமல்ல மற்றும் ஏனைய தன்மைகளான நேர்மை கடினமாக உழைக்கும் தன்மை, உரியநேரத்திற்கு வருதல் சிறந்த மனோபாவம் போன்றவை தொழில் கொள்வோரால் எதிர்பாரக்கப்படுகிறது.

இங்கு தொழில் கொள்வோர் உயர் திறமைகளுடன் சிறந்த மனோபாவத்தினையே (Positive Attitudes) எதிர் பார்க்கின்றனர் என்பதைக் குறிப்பிடுவதை நாம் அவதானிக்கலாம். இவ் எதிர்பார்ப்பு மனித வள முகாமைப் பட்டதாரிகளுக்கு மட்டுமான ஆய்வின் முடிவாயினும் இதனையே ஏனையோரிடம் இருந்தும் நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன என்பதே யதார்த்தமாகும். ஊயர் கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் பட்டதாரி மாணவர்களிடம் சிறந்த மனோபாவத்தினை உருவாக்குவதிலும் கவனம் செலுத்துவதை இக்காலகட்டத்தில் அதி உன்னத இலக்காக கொள்ளவேண்டும். எனவே நிறுனங்கள் ஆட்சேர்க்கும் போது கல்வித் தகைமைகளில் மட்டும் கவனம் செலுத்தாது விண்ணப்தாரிகளிடம் எவ்வாரான நடத்தைகள், தன்மைகள், மனோபாவங்கள் கொண்டுள்ளனர் என்பதனை மதிப்பிட்டுத் தெரிவு செய்வதே நிறுவனம் குறித்த இலக்கை அடைய வழிவகுக்கும். எனவே சரியான ஆட்கள் என்போர் (Right People) சிறந்த மனோபாவம் இன்றி உருவாக முடியாது. சிறந்த மனோபாவம் இன்றி சிறந்த நிறுவனங்கள் உருவாக முடியாது என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

ஊழிர்கள் தனிப்பட்ட முறையில் தங்களது மனோபாவத்தினை சிறப்பாக ஆக்க முயற்சிப்பது அவசியம். ஆதன் மூலம் அவர்களால் சிறந்த பங்களிப்பினை நிறுவனத்திற்கும் சமூகத்திற்கும் முழு நாட்டிற்கும் வழங்க முடியும். சிறந்த மனோபாவத்தினை உறுவாக்க ஊழியர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை (Gamage 2006) குறிப்பிடும் போது பின்வரும் விடயங்களை காணக் கூடியதாக உள்ளது.

சிறந்த மனோபாவத்தினை உருவாக்குவதற்கான சில நடவடிக்கைகளும் காரணிகளும்.

உம்முடைய பேச்சில் எப்போதும் சிறந்த வார்த்தைகளை பயன்படுத்து.எனக்கு முடியும் எனக்கு செய்யக்கூடியது, அது சாத்தயமானது, அதை செய்ய முடியும் போன்ற வார்த்தைகளை பயன்படுத்தவும்.

உம்முடைய பேச்சில் மகிழ்ச்சி, பலம், வெற்றி தொடர்பான உணர்வுகளை இணைத்துக்கொள்ளவும்.

மோசமான சிந்தனைகளை வெளிப்படுத்தாதே.இப்படியான சிந்தனைகளை சிந்திப்பதையும் அமைதியாக நிராகரித்து, சிறப்பான ஒழுங்கமைக்கப்பட்ட சிந்தனைகள் மூலம் பதிலீடு செய்யவும்.

ஏனையோருடன் உம்முடைய பேச்சில் அவர்களுடைய உள்ளத்தில் பலம், சந்தோசம், வெற்றி தொடர்பான காட்சிகளை உருவாக்கும் சொற்களைப் பயன்படுத்தவும்.

ஏதாவது திட்டம் அல்லது நடவடிக்கையை ஆரம்பிக்க முன் அதனுடைய வெற்றிகரமான முடிவினை உம்முடைய மனதில் தெளிவாக பார்க்க முயற்சி செய்யவும்.

தினமும் ஊக்கமளிக்கக் கூடிய எழுத்து ஆக்கங்களில் ஒரு பக்கத்தையாவது வாசிக்கவும்.

சிறப்பாக சிந்திப்போருடன் தொடர்பினை வைத்துக் கொள்ளவும்.


எப்போதும் அமரும் போதும், நடக்கும் போதும் உம்முடைய பின்பக்கம் நேராக இருக்கவும். இது உம்முடைய நம்பிக்கையையும், உள்ளக பலத்தினையும் வலுப்படுத்தும்.

நடத்தல்,நீச்சல் அல்லது உடல் ரீதியான நடவடிக்கைகளில் பங்குபற்றவும். இது மிகவும் சிறப்பான மனோபாவத்தினை உருவாக்க உதவும்.

சிறந்த மனோபாவம் உள்ளோரை தெரிவு செய்வதுடன் அவர்களை தொடர்ச்சியாக நிறுவனத்தில் வைத்திருக்கத் தேவையான ஊக்கப்படுத்தல்களை மேற்கொள்வது அவசியமாகும்.

நிறுனத்தின் நோக்கங்களை அடைவதற்கு பங்களிப்புச் செய்தோரின் செயற் திறனுக்கான பாராட்டுதல்கள், கடந்த கால செயற் திறனுக்கான வெகுமதியாக மட்டுமன்றி நீண்ட கால வெற்றியினை உறுதி செய்வதற்காக பொருத்தமான மனோபாவத்தினையும் நடாத்தைகளையும் கொண்டுள்ள தனிப்பட்ட ஊழியர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். (Bolton-1999)

இவ்வாறு சிறந்த மனோபாவம் உள்ளோரை ஊக்கப்படுத்துவதன் மூலம் அவர்களை தொடர்ச்சியாக வைத்திருக்க முடிவதுடன் ஏனையோரிடத்திலும் அவ்வகையான சிறந்த மனோபாவத்தினை உருவாக்க முடியும். எனவே நிறுவனங்கள் சிறந்த மனோபாவமுள்ள ஊழியர்களை தெரிவு செய்து ஊக்கப்படுத்தி தொடர்ச்சியாக வைக்க முயற்சிப்பதே அதன் வெற்றிக்கு இன்றியமையாததாகும்.



M.A.N.ஹுசைன் அலி,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தென்கிழக்கு பல்கலைக்கழகம்.

# புலிகள் மீதான இந்தியாவின் தடை தொடர்பில் வாதாட நீதிமன்றம் அனுமதி

இந்தியாவில் தடை செய்யப்பட்டிருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிக்கு, அந்த அமைப்பின் தடையை நீக்குவது தொடர்பிலான வழக்கில் வாதாடுவதற்கு நீதிபதியின் அனுமதி கிடைத்திருக்கிறது.

விடுதலைப் புலிகள் மீதான தடையினை இந்திய மத்திய அரசு மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்து பிறப்பித்த ஆணை சரியானது தானா என்பதை ஆராய்ந்துவரும் நீதிபதி வி.கே.ஜெயின் தலைமையிலான தீர்ப்பாயம், சுவிட்சர்லாந்தில் தற்போது வசித்துவரும் விஜயரட்னம் சிவநேசன் விடுதலைப்புலிகள் சார்பாக நீடிப்பினை எதிர்த்து மனு சமர்ப்பிக்கலாம் என்று உத்தரவிட்டது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட பின்னர், 1992 முதல் விடுதலைப் புலிகள் மீதான தடை தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வருகிறது. ஆனால் ஒவ்வொரு முறையும் நீதிபதி ஒருவர் தலைமையிலான தீர்ப்பாயம் தடை அவசியமா என்பது குறித்து விசாரித்து, விசாரணையின் அடிப்படையில் மத்திய அரசு ஆணை செல்லுமா இல்லையா என தீர்ப்பு கூறும்.

தடை செல்லும் என்றே இது வரை தீர்ப்புக்கள் வெளியாகியிருக்கின்றன. அதன்படியே கடந்த மே மாதத்தில் விடுதலைப்புலிகள் மீதான தடை மேலும் இரண்டாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது.

அதுகுறித்து டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி ஜெயின் விசாரணை மேற்கொண்டிருக்கிறார்.

கடந்த இரண்டு நாட்களாக கொடைக்கானலில் அத்தீர்ப்பாயத்தின் அமர்வு நடைபெற்றது. அப்போது சுவிட்சர்லாந்தில் வசிக்கும் விஜயரட்ணம் சிவநேசன் என்பவர், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிராந்திய ஒருங்கிணைப்பாளர் என்று மனு சமர்ப்பித்துள்ளார்.

ஐரோப்பாவில் இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக தான் பாடுபடுவதாகவும், விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கைத் தமிழர் உரிமைக்காக பாடுபட்டது, தற்போது இந்தியாவில் அதன் செயல்பாடு எதுவுமில்லை. அந்நிலையில் இந்தியாவில் அதன் மீதான தடை நீக்கப்படவேண்டும் எனக் கோரி அவர் எழுதியிருந்த மனுவினை அவர் சார்பில் சென்னை வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன் சமர்ப்பித்தார்.

அவர் சார்பாக தீர்ப்பாயத்தின் முன் தன்னை வாதாடுமாறு கோரி சிவநேசன் எழுதியிருந்த கடிதத்தினையும் ராதாகிருஷ்ணன் நீதிபதியிடம் கையளித்தார்.

சிவநேசன் குறித்து விபரங்கள் உறுதியாகத் தெரியாத நிலையில் சிவநேசனின் மனு ஏற்கப்படக்கூடாது என மத்திய அரசு சார்பில் வாதிடப்பட்டது.

ஆனால் நீதிபதி வி.கே. ஜெயின் சிவநேசன் சார்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படலாம் என உத்தரவிட்டார்.

தீர்ப்பாயம் இப்போது தான் தடையினை எதிர்த்து விடுதலைப்புலிகள் சார்பாக வாதிட ஒருவரை அனுமதித்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. தீர்ப்பாயத்தின் விசாரணை தொடரும்.

## விருப்பு வாக்கை ஒழிக்க வேண்டும்!

தேர்தலின் போது விருப்பு வாக்கு முறமையின் காரணமாக வேட்பாளர்களின் கௌரவம் பாதிக்கப்படுவதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மரியாதைக்குரிய சிறந்த அரசியல்வாதிகளை உருவாக்க வேண்டுமெனின் விருப்பு வாக்கு முறமையை இல்லாதொழிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பொலன்நறுவையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## அக்டோபரில் 13 பேர் பலி!

இயற்கை அனர்த்தம் காரணமாக அக்டோபர் மாதத்தில் மாத்திரம் 13 பேர் மரணமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதில் 8 பேர் மின்னல் தாக்கத்தாலும் இருவர் நீரில்

மூழ்கியும் மூவர் மண்சரிவுகளில் அகப்பட்டும் மரணித்துள்ளதாக

அந்நிலையம் குறிப்பிட்டுள்ளது.

## சட்டவிரோத கருக்கலைப்பு நிலையம் முற்றுகை

கேகாலை பொலீஸ் பிரிவில் சட்ட விரோதமான முறையில் இயங்கிவந்த கருக்கலைப்பு நிலையமொன்றை முற்றுகையிட்ட கேகாலை பொலிஸாரினால் போலி டாக்டர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கேகாலை அம்பலாவல பகுதியில் இயங்கி வந்த சட்டவிரோத கருக்கலைப்பு நிலையமே பொலிஸாரினால் நேற்றுக் காலை முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதன்போது கருக் கலைப்புக்காக பயன்படுத்தப்படும் உபகரணங்கள் பலவற்றை

கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## பாடசாலை செல்லாத சிறுவர்களை பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளல்

### வலி. வடக்கு கிராமம் தோறும் நடவடிக்கை

வலி. கிழக்கு பிரதேசத்தில் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களை கண்டுபிடித்து அவர்களைப் பாடசாலையில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களை பாடசாலையில் சேர்த்துக் கொள்ளல் என்ற வேலைத்திட்டத்தின் கீழ் வலி கிழக்குப் பிரதேச செயலக அதிகாரிகள் வாரம்தோறும் ஒரு கிராமத்திற்குச் சென்று நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வசந்தபுரம், கலைமதி, அச்செழு, யோகபுரம், செல்வபுரம் உள்ளிட்ட பகுதிகளுக்குச் சென்று அப்பிரதேச கிராம சேவையாளர் உதவியுடன் சிறுவர் நலன் அபிவிருத்தி அதிகாரி உள்ளிட்ட குழுவினர், பட்டதாரிப் பயிலுனர்கள் ஆகியோர் இணைந்து இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இத்திட்டத்தின் கீழ் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்கள் பாடசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் சிறுவர் நலன் அபிவிருத்தி அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இச்செயற்திட்டத்திற்கு சனசமூக நிலையப் பிரதிநிதிகள், உள்ளூர் பொது அமைப்புக்கள் பிரதிநிதிகள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், மூத்த பிரஜைகளும் உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பண்டாரவளையில் சடலம் மீட்பு!

பண்டாரவளை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பண்டாரவளை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் 60 வயதான பெண் ஒருவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் தற்கோது தியத்தலாவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள அதேவேளை பிரேத பரிசோதனைகள் இன்றைய தினம் இடம்பெறவுள்ளன.

## ஆபாச வீடியோ: இளைஞர் கைது!

பொலன்நறுவை தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றில் ஆபாச விடியோக்களுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 23 வயதுடைய இளைஞர் ஒருவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இவரை பொலன்நறுவை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளில் பொலன்நறுவை பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, இவ்வாறான ஆபாச வீடியோக்களை வைத்திருந்த பலர் பொலிஸாரால் கைது செய்து சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இரும்பு சேகரிக்கும் நிலையத்தில் வெடிப்பு: இருவர் காயம்

கந்தளாய், பிரதேசத்தில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

பழைய இரும்பு சேகரிக்கும் கடை ஒன்றிலேயே இவ் வெடிபபுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் இவ் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கந்தலாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இரும்பொன்றை வெட்டும் போது வெடிப்புச் சம்பவம் நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த இருவரும் கந்தலாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பான விசாரனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கந்தலாய் பொலிஸார் தெரிவித்தனர்.

## புத்தளம் - மன்னார் வீதி எலுவங்குளம் வரை மூடப்பட்டுள்ளது

புத்தளம் - மன்னார் பிரதான வீதி எலுவங்குளம் வரை மூடப்பட்டுள்ளது.

கலா ஓயாவின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளமையின் காரணமாக இவ் வீதி மூடப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

புத்தளம் - மன்னார் வீதியில் கலா ஓயா பிரவேசிக்கும் இடத்தில் தற்போது மூன்று அடி வரையில் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதன்காரணமாக புத்தளம் - மன்னார் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் அநுராதபுரம், மதவாச்சி பிரதேசத்தில் திரும்பி மன்னார் நோக்கி பயணிக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

கலா ஓயாவின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ள இந்நிலையில் மக்கள் அது குறித்து அவதானமாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவுறித்தல் விடுத்துள்ளது.

## நாட்டில் 30,000 போலி வைத்தியர்கள் உள்ளனர்

### - மத்திய மாகாண சுகாதார அமைச்சர்

30 ஆயிரம் போலி வைத்தியர்கள் இருப்பதாக இணங்காணப்பட்டுள்ளனர். இது வைத்தியத் துறைக்கு பாரிய சிக்கலான நிலைமையாகும் எனத் தெரிவித்த மத்திய மாகாண சுகாதார அமைச்சர் சுனில் அமரதுங்க, சுதேச துறையில் வைத்தியராக இருப்போர் மேலைத்தேய மருத்துகளையே வழங்கி வருவதாகவும் குற்றம் சாட்டினார்.

கண்டியில் இடம் பெற்ற செயலமர்வொன்றின்போதே மாகாண அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகை யில்,

சிறுநீரகத்தில் ஏற்பட்ட ஒரு நோய்க்கு ஆயுர்வேத மருந்து வகைகளை சிறிது காலம் பாவித்தேன். சில வாரங்களில் எனது நுரையீரல் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டது. பின்னர் நான் இந்தியாவிற்குச் சென்று எனது நோயை குணப்படுத்திக் கொண்டேன். பின்னர் திரும்பி வந்து எனக்கு தரப்பட்ட மருந்தை ஆய்விற்கு உட்படுத்தியபோது 90 சதவீதம் கஞ்சா போதை அதில் சேர்க்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

இதேபோல் மத்திய மாகாண சபை அங்கத்தவரான அங்கம்மன தொடர்ந்து நீண்டகாலம் “அரிஸ்டை” வகைகளைப் பாவித்து வந்ததன் காரணமாக அவரது சிறுநீரகம், ஈரல் போன்றவை பாதிக்கப்பட்டு இறுதியில் அவர் மரணமடைய வேண்டி வந்தது.

அதே நேரம் நாட்டில் 30,000 போலி வைத்தியர்கள் இருக்கிறார்கள். இதைவிட இன்னொரு ஆபத்தும் உள்ளது.அதாவது சுதேச வைத்தியத் துறையில் தமது படிப்பபை மேற்கொண்டு வைத்தியராக இருப்பவர்களில் அநேகர் மேலைத்தேய மருந்துகளையே வழங்குகின்றனர்.


இங்கு ஆயுர்வேதத்துறைக்கான ஒழுங்கு விதி முறைகள், பாரம்பரியம் போன்ற அனைத்துமே மீறப்பட்டு வர்த்தக ரீதியில் முதன்மைப்படுத்தப்படுகிறது.

அதேபோல் சிலர் போலி விளம்பரங்களை வழங்கி பணம் பறிக்கின்றார்கள். இப்படியான எமது பாரம்பரிய வைத்திய முறை வீழ்ச்சிக்கு உள்ளாகின்றது.

இலங்கை முஸ்லிம்களில் பாரம்பரிய வைத்திய முறையை கைவிட்டு விட்டனர்.

சிங்கள மன்னர் காலம் முதல் அதே வைத்தியத் துறையில் பரம்பரை வைத்தியர்களாக இருந்த முஸ்லிம்கள் அத்து றையை கைவிட் டதாகவும் எமது சுதேச வைத்தியத் துறை அருகிவரக் காரணமாகி உள்ளது என்றார்.

# கண்களே



# எங்கள் வாழ்வு

கண்கள், சாதாரண மனிதனிடத்தில் அழகு ணர்ச்சியை தோற்று விப்பதில் முக்கிய பங்காற்று பவை. நாம் மற்றவர்களோடு எப்படிப்பட்ட நெருக்கத்தினை - உறவினைக் கொண்டிருக்கிறோம் என்பதனை எதிராளிக்குத் தெரி வித்திடும் கருவி. ஒவ்வொரு வரும் உடல் ரீதியாகத் தங்க ளுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட் டால் மட்டுமே அதற்கான தீர்வை நோக்கிச் செல்கின்றனர். ஆனால் அத்தகைய விதிகளிலி ருந்து விலக்கப்பட்டவை கண் கள். இங்கே, கண்கள் குறித்த பல சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கிறார், டாக்டர் மனோகர் பாபு.

**ஆரோக்கியமான மனிதன் ஒருவனால் வாழ்க்கை முழுவ தும் கண்ணாடியை அணியாமல் இருக்க இயலுமா?**

பதில்: மிக மிகக் கடினம். பார்வைக் குறைபாடுகள் என்பது ஒவ்வொரு மனிதனும் தன்னு டைய கண்களைப் பயன்படுத் தும் விதத்தில்தான் அடங்கியி ருக்கிறது.

மேலும் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி. ஒவ்வொருவரும் நாற்பது வயதைக் கடந்துவிட்டால் பார்வைக்கான தசை நரம்புக ளில் இறுக்கம் குறைந்து தளர்ச்சியடைந்துவிடும். இது இயல்பானது. மாற்றியமைக்க முடியாதது. இத்தகைய தரு ணங்களில் தூரப் பார்வை அல்லது கிட்டப் பார்வை [illegible]ன்ற பார்வைக் குறைபாடுகள் ஏற்படுவது இயல்பு. இந்த நிலையை நோய் என்றோ அல்லது வியாதி என்றோ குறிப்பிடக்கூடாது. எனவே ஒவ்வொருவரும் நாற்பது வயதைக் கடந்தவுடன் கண் மருத்துவரை அவசியம் சந்தித்து, தங்களுடைய பார்வைத் திறனை சோதித்துக் கொள்ளவேண்டும். இது ஒவ்வொரு ஆண்டும் தொடரவேண்டும். மருத்துவர்க ளின் ஆலோசனையை பின் பற்றினால் மரணம் வரை பார்வையிழப்பு இல்லாமல் இருக்கக்கூடும். ஆனால் கண்ணாடி அணிவது என்பது தவிர்க்க முடியாதது. ஏனெனில் ஒவ்வொருவரின் விழித்திரையும் [illegible] தன்மை கொண்டதாக இருப்பதில்லை. அத்துடன் சில பயிற்சிகளைச் செய்வதால் கண்ணாடி அணிவது தள்ளிப் போடப்படுமே தவிர, கண்ணாடியை அணியாமல் வாழ்க்கையை நடத்த முடியாது. கண்ணாடி அணியாமல் வாழ்க்கை முழுவதும் இருக்க முடியும் என்பதை இதுவரை மருத்துவத்துறை அறிவியல் பூர்வமாக நிரூபிக்கவில்லை.

**முப்பரிமாணக் காட்சியைக் காண்பதற்காக வழங்கப்படும் கண்ணாடியைத் தொடர்ந்து பயன்படுத்துவதாலோ அல்லது முப்பரிமாண விளைவுடன் தயாரிக்கப்படும் வீடியோ கேம்ஸ்களைத் தொடர்ந்து விளையாடுவதாலோ அவர்களுக்கு பார்வைக் குறைபாடுகள் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறதா?**

வாய்ப்புகள் இருக்கிறது. ஆனால் இத்தகைய பாதிப்புகளால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை குறைவு. 3D எபெஃக்டுடன் கூடிய வீடியோ கேம்ஸை தொடர்ந்து விளை யாடும் கலாசாரம் இன்னும் தெற்காசியாவில் முழு அளவில் பிரபலமாகவில்லை. என்றாலும் இத்தகைய விளையாட்டை விளையாடுபவர்களுக்கு அல்ட்ரா வயலட் கதிர்களின் தாக்கத் திற்கும், இன்பெரா கதிர்களின் தாக்கத்திற்கும் ஆளாகிறார்கள். அதனால் பார்வைக் குறை பாடுகள் தோன்றுவதைத் தவிர்க்க முடியாது. இவர்களை விட ஊட்டச் சத்துக் குறைவால் கண்புரை ஏற்பட்டு பார்வையைப் பறிகொடுக்கிறவர்கள் தான் அதிகம்.

**பெண்களுக்குப் பேறு காலத்தின் போது பார்வைக் குறைபாடு தொடர்பான சிக்கல் வந்தால் அதற்கு சிகிச்சை எடுத்துக் கொள்ளக்கூடாது என்கிறார்களே. உண்மையா?**

இது தவறான நம்பிக்கை. ஆனால் பேறு காலத்தின்போது எல்லாப் பெண்களுக்கும் உடல் எடை அதிகரிப்பதால் இரத்த அழுத்தம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. இத்தகைய தருணங்களில் கண்களின் ரெட்டினா பகுதியில் உள்ள நரம்புகளின் செயற்பாட்டில் மாறுதல்கள் ஏற்படுகின்றனவா என்பதை ஆராய வேண்டும். அப்படி மாறுதல்கள் ஏற்பட்டால் மகப்பேறு மருத்துவ நிபுணர்கள், அருகிலுள்ள கண் மருத்துவ நிபுணர்களை ஆலோசித்து, அந்தப் பெண்ணுக்கு சத்திர சிகிச்சை மூலம் குழந்தையை வெளியே எடுக்க வேண்டிய நிலை உருவாகும். அதனை செய்யவில்லை எனில் பிரவத் தின்போது தாய்க்கு பார்வைக் குறைபாடுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. ஆனால் இந்த நிலை மிக அரிதாகத்தான் ஏற்படுகிறது.

**மதுபான வகைகள் அல்லது விஷத்தினால் ஏற்படும் பார்வை யிழப்பை மீட்டெடுக்க இய லாதா?**


முடியாது. ஏனெனில் கள்ளச் சாராயத்தை அருந்துவதால், அதிலிருக்கும் மீத்தேல் அல்கஹோல் என்னும் விஷம், பார்வைக்கான நரம்பினை பாதித்து, அதனை அழித்து விடுகிறது. அல்லது அதன் செயற்பாட்டை முற்றிலுமாக முடக்கிவிடுகிறது. இதனால் விழித்திரை செயலிழந்து பார்வையிழப்பு ஏற்படுகிறது. பார்வைக்கான நரம்புகளை மீண்டும் புதுப்பிக்கும் தொழில் நுட்பம் இன்னும் கண்டறியப் படவில்லை என்பதால் இது அசாத்தியமே.

**கண்களை தானமாகப் பெறுவதன் மூலமாகவோ அல்லது ஓ.ஓ.கே.பி மூலமாகவோ இவர்களின் பார்வையை மீட்டெடுக்க வாய்ப்பு உண்டா?**

கண்களை தானமாகப் பெறுவது என்பது கருவிழியை மாற்றுதல், அதாவது நமக்கு கார்னியா பகுதிகளில் அடிபட்டு, பார்வைக் குறைபாடு இருக்கும் தருணத்தில்தான், இறந்தவர் களின் கண்களில் இருந்து பெறப்படும் கருவிழியைப் பொருத்தி பார்வையை மீட்டெடுக்க இயலும். விஷ சாராயத்தினால் ஏற்படும் பார்வையிழப்பிற்கு இவை பொருத்தமாகாது.

**நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை தெற்காசியாவில் மிகவும் வேகமாக அதிகரித்து வருவதால் பார்வைக் குறைபாடு தொடர்பான சிக்கல்களின் எண்ணிக்கையும் அதிகரித்து விடும் என்று மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கும் கருத்துகள் ஏற்புடையதா?**

முற்றிலும் சரியே. பார்வைக் குறைபாட்டை ஏற்படுத்துவதில் டயாபடிக் ரெட் டினோபதி எனப்படும் நீரிழிவு நோயால் ஏற்படும் பார்வைக் குறைபாடு, மூன்றாம் இடத்தில் உள்ளது. பொதுவாக, பார்வைக் குறை பாட்டைப் பொறுத்தவரை கண் புரையால் பாதிக்கப்படுவோர்கள் தான் அதிகம். அதனைத் தொடர்ந்து க்ளுக்கோமா எனப்படும் கண்நீர் அழுத் தத்தால் ஏற்படும் பார்வைக் குறைபாடு. இதற்கடுத்து வரு வதுதான் டயபடிக் ரெட்டினோ பதி. மேற்கூறிய மூன்று வித பார்வைக் குறைபாடுகளும் ஆரம்ப கட்டத்தில் கண்டறிப் பட்டால் பார்வையிழப்பிலிருந்து பாதுகாக்க இயலும். அதற்கான அனைத்து நவீன வசதிகளும் தற்போது வந்துவிட்டன.




# கண் விழி விறைப்பு நோய் அல்லது குளுக்கோமா என்றால் என்ன?



நம் கண்களின் அமைப்பிலேயே ப்ளம்பிங் போல் குழாய் அமைப்புகள் உள்ளன. இந்தக் குழாய் அமைப்பானது கண்களின் கரு விழிப்பகுதிகள் மற்றும் லென்ஸ் ஆகியவற்றிற்கு aShuebus என்ற திரவத்தை எடுத்துச் செல்கிறது. இந்த ப்ளம்பிங் அமைப்பில் கோளா றுகள் ஏற்பட்டால், அதாவது திரவம் வரும் வழியிலோ அல்லது வெளியேறும் வழியிலோ தடை ஏற்பட்டால் கண்ணிற்குள் திரவத்தின் அழுத்தம் அதிகமாகும். ஆனால் இந்தத் திரவத்திற்கும் கண்ணீருக்கும் சம்பந்தம் இல்லை.

குளுக்கோமா யாருக்கு ஏற்படும்?

35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு

குளுக்கோமா நோயாளிகளின் இரத்த உறவினர்களுக்கு

அதிகிட்டப்பார்வை உள்ள நபர்களுக்கு (myopes)

நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு

குளுக்கோமா நோய்களில் பல வகைகள் உண்டு.

1. முதற்கட்ட திறந்த கோண குளுக்கோமா
2. முதற்கட்ட கோண மூடுதல் குளுக்கோமா
3. குறை விறைப்பு குளுக்கோமா (Low Tention GLAUCOMA)

**இரண்டாம் கட்ட குளுக்கோமா**

நீரிழிவு அல்லது எரிச்சல், வீக்கம், கண்புரை தீவிரமடைந்த நிலை, ஸ்டெராய்ட் உள்ளிட்ட மருந்துகள், கண்களில் ஏற்படும் காயங்கள் ஆகியவற்றால் திரவ வடிகால் கோணம் சேதமடையும்போது இந்த வகை குளுக்கோமா ஏற்படுகிறது. இதற்கு சிகிச்சை அளிக்கும் போது குளுக்கோமாவுடன் சேர்த்து அடிப்படை பிரச்சினைக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

பிறவி அல்லது வளர்ச்சி நிலை குளுக்கோமா

குழந்தைகளையும், இளம் வயதினரையும் பாதிக்கும் மிக வும் அரிதான வகை குளுக் கோமா இதுவே. இது வம்சா வழியாகவோ அல்லது குழந்தை கருப்பையில் வள ரும்போது அதன் கண் திரவ வடிகால் பாதைகள் வளரும் போது தவறாகவோ அல்லது பூர்த்தியடையாத வளர்ச்சியா கவோ அமைந்தால் ஏற்படும்.

சிகிச்சை முறைகள்

1. மருந்துகள்
2. லேசர் சிகிச்சை
3. அறுவை சிகிச்சை




அதனாலென்ன? இன்னொரு கட்டிடம் கட்டிக்கொள்வோம் நாம். விருப்பமிருந்தால் ஆறு காற்றாடிகள் அமைத்துக்கொள்ளலாம். நாம் சாதித்துவிட்ட வீரத்தனமான செயலை, அடைந்த மாபெரும் வெற்றியை, நீர் சரிவர உணரவில்லை என்பது தெரிகிறது. நாம் நிற்கிற இந்த மண்ணை எதிரி ஆக்கிரமித்துக்கொண்டிருந்தான்.


இப்போது, தலைவர் நெப்போலியனின் தலைமைத் திறத்தால், நாம் அதை மீட்டு விட்டோம். மகத்தான வெற்றியல்லவா இது? நம்மிடம் இருந்ததை நாம் மீண்டும் வென்று விட்டோம் என்றது பாக்ஸர். அதுதான் நமது வெற்றி என்றது ஸ்க்வீலர். நொண்டிக்கொண்டே பாக்ஸர் முற்றத்திற்குள் வந்தது. அதன் காலில் தைத்திருந்த ரவை குண்டுகளால் ஏற்பட்ட வலி பொறுத்துக்கொள்ள முடியாததாக இருந்தது. மீண்டும் காற்றாடி யந்திரக் கட்டிட வேலை தொடங்கியாக வேண்டும். அந்த மகத்தான காரியத்தைச் சாதிக்கக் கற்பனையில் அது தன்னையே தயார் செய்துகொண்டது.

ஆனால் தனக்குப் பதினொரு வயதாகிவிட்டது என்பது முதல் தடவையாக அன்றுதான் அதற்குத் தெரியவந்தது. தனக்கு முன்போல பலம் இல்லை என்பதும் அன்றுதான் அது உணர்ந்தது.கொடிக் கம்பத்தில் பச்சைக்கொடி உயரப் பறந்து கொண்டிருந்தது. துப்பாக்கி வேட்டு ஏழுதரம் வெடிக்கப்பட்டது. நெப்போலியன் ஒரு உருக்கமான பிரசங்கம் செய்தது. மகத்தான சாதனைக்குத் தன் பாராட்டை நெப்போலியனே நேரில் தெரிவித்தது. இதையெல்லாம் கேட்டபின் விலங்குகளுக்கும் தாங்கள் ஏதோ பிரமாதமான ஒரு காரியத்தைச் செய்து முடித்து விட்டதாகத்தான் தோன்றியது. வெற்றி என்றால் சாதாரண வெற்றியா அது? யுத்தத்தில் உயிர்துறந்த மிருகங்களுக்குச் சவ அடக்கம் உரிய மரியாதைகளுடன் கௌரவமாகச் செய்யப்பட்டது. சவ வண்டியை பாக்ஸரும் க்ளோவரும் இழுத்துச் சென்றன. ஊர்வலத்தின் தலைப்பில் நெப்போலியன் நடந்தது. கொண்டாட்டங்கள் இரண்டு நாட்கள் முழுவதும் நடைபெற்றன.

பாட்டுகள், பிரசங்கங்கள், வேட்டு வைத்தல் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வெகு சிறப்பாக நடந்தன. ஒவ்வொரு மிருகத்துக்கும் ஒவ்வொரு ஆப்பிள் இனாமாகத் தரப்பட்டது. ஒவ்வொரு பறவைக்கும் இரண்டு ஆழாக்கு தானியம் இனாம் தரப்பட்டது. நாய்களுக்கு தலா மூன்று பிஸ்கோத்துகள் அளிக்கப்பட்டன. அநத யுத்தத்துக்குக் "காற்றாடி யந்திரக் கட்டிட யுத்தம்" என்று பெயரிடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஒரு புதுமெடல் ஒன்று உற்பத்தி செய்து, அதைத் தனக்கே அளித்துக் கொண்டு விட்டதாக நெப்போலியன் தெரிவித்தது.

அதன் பெயர் பச்சைக்கொடி மெடல். இந்தப் பேரின்பத்தில் கள்ள நோட்டுக்களால் ஏமாற்றப்பட்ட விஷயத்தை விலங்குகள் மறந்திருந்தன. இதற்குச் சில நாட்களுக்குப் பிறகு, பண்ணை வீட்டு அடித்தளத்திலே ஒரு பீப்பாய் சாராயம் இருந்ததைப் பன்றிகள் கண்டுபிடித்தன. முதலில் வீட்டைப் பிடித்துக் கொண்டபோது அவை அதைப் பார்க்கவில்லை. பண்ணை வீட்டிலிருந்து அன்றிரவு - அதாவது சாராயப் பீப்பாய் கண்டுபிடிக்கப்பட்ட அன்று - ஒரே பாட்டும் கூத்தும் களியாட்டமுமாக இருந்தது.

**(நாளை)**




## சுலபமான கணக்கு

15 ஆவது வாய்பாடு உங்களுக்குத் தெரியுமா? தெரியவில்லைன்னா கவலை விடுங்கள்... எத்தனை இலக்க எண்ணாக இருந்தாலும் அதை ஒரு நிமிடத்தில் கண்டுபிடித்து விடலாம்... ரொம்ப ரொம்ப சிம்பிள்.

உதாரணத்துக்கு ஒரு இரண்டு இலக்க எண்ணை தேர்வு செய்துகொள்ளுங்கள்.

உதாரணம் 23. இதை 15ஆல் பெருக்க வேண்டும்.
23 X 15

தேர்வு செய்த எண்ணுடன் ' 0 ' சேர்த்துக்கொள்ளுங்கள்.
230.


230 எண்ணை "2" ஆல் வகுக்க வேண்டும்.
230/2 = 115.

இப்போ 230 ஐயும் 115 யும் கூட்ட வேண்டும்.
230 + 115 = 345.

இதுதான் விடை,
23 X 15 = 345.

இதே போல் மூன்று, நான்கு, ஐந்து இலக்க எண்ணையும் பெருக்கலாம்.

## தகவல்கள்



* நாய்க்கு நிற வேறுபாடு தெரியாது.
* யானைக்கு குதிக்கத் தெரியாது.
* கண்களை இமைக்காமல் தவளையால் இரையை விழுங்க முடியாது.
* பாம்புக்கு கேட்கும் சக்தி கிடையாது.
* கிவி பறவைகளுக்கு பறக்கும் சக்தி கிடையாது.
* குதிரைக்கு படுத்து உறங்கத் தெரியாது.
* காகம் தனது இடது காலைத்தான் அதிகமாகப் பயன்படுத்தும்.
* கோலா கரடிகள் தினமும் 24 மணி நேரம் தூங்கியே பொழுதைக் கழிக்கின்றன.

# சிறுவர் அமுதம்

## தகுதி

எதற்குமே தகுதி என்ற ஒன்று வேண்டும். வாழும்போது செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் தகுதி வேண்டும்.

பரிணாமவியல் பிதாமகர் சார்ல்ஸ் டார்வினின் முக்கிய கோட்பாடு, 'Survival of the fittest" எந்த உயிரினம் சூழலுக்கு ஏற்ப தன்னை அட்ஜஸ்ட் செய்துகொள்ளத் தயாராக இருக்கிறதோ, அதுவே வாழத் தகுதியானதாக இருக்கும்.

தாக்குப்பிடிக்க முடியாதவை அழிந்து போய்விடும். அரிதான எத்தனை உயிரினங்கள் அழிந்து கொண்டிருப்பதாக தினசரி செய்திகள் படிக்கிறோம். ஆனால், எல்லாவற்றையும் அழித்துவிட்டு, அவற்றைத் தாண்டி ஜீவித்திருக்கும் சாமர்த்தியத்தை மனிதன் பெற்றிருக்கிறான்.

வாழ்வில் வெற்றிபெறச் சில அடிப்படைத் தகுதிகளை வளர்த்துக்கொள்ளுங்கள் என 60 வகையான தகுதிகளைச் சில சுய முன்னேற்றப் பயிற்சிகளில் வலியுறுத்துவார்கள். நம்பகத்தன்மை, வளைந்து கொடுத்துப் பேசுவது, கண்களை நேருக்கு நேர் பார்த்துப் பேசுவது, கூட்டுமுயற்சியில் ஒத்துழைப்பது, அனுபவம், கண்ணியம் என நீளும் அந்த லிஸ்ட்...

"இதனை இதனால் இவன்முடிப்பான் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்." என்ற திருக்குறளில் திருவள்ளுவர் ஆராயச் சொன்னது தகுதியைத்தான்.

**சுடோக்கு எண் 83 விடை**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | 9 | 7 | 2 | 1 | 6 | 3 |
| 4 | 2 | 1 | 3 | 9 | 6 | 7 | 5 |
| 6 | 3 | 7 | 8 | 5 | 4 | 2 | 9 |
| 1 | 7 | 6 | 2 | 3 | 8 | 9 | 4 |
| 5 | 8 | 3 | 4 | 6 | 9 | 1 | 2 |
| 9 | 4 | 2 | 1 | 7 | 5 | 3 | 8 |
| 3 | 1 | 5 | 6 | 8 | 2 | 4 | 7 |
| 2 | 9 | 4 | 5 | 1 | 7 | 8 | 6 |
| 7 | 6 | 8 | 9 | 4 | 3 | 5 | 1 |

**சுடோக்கு எண் 84**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 7 | | | 8 | |
| 5 | 8 | | | | | 2 | | 4 |
| 3 | | | | | 4 | 5 | | |
| | | | | 9 | 7 | | | |
| 7 | | 3 | | | | 9 | | 6 |
| | | | 6 | 4 | | | | |
| | | 1 | 7 | | | | | 5 |
| 2 | | 6 | | | | | 7 | 3 |
| | 7 | | | 1 | 3 | | | |

**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# காதல் ஒன்று கொலைகள் இரண்டு

ராகம பொலிஸ் பிரிவில் லியன்வத்த, கந்தப்பொல எனும் முகவரியில் வசித்த பழனி இராஜமணி என்ற 55 வயது பெண் வெட்டி கொல்லப்பட்டிருந்தார்.

அவரைக் கொலை செய்த நபர் அவரின் மகளையும் கத்தியால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளார். அதனால் மகளுக்கு மிகவும் பாரிய காயம் ஏற்பட்டது. இதனை மேற்கொண்டவர் சம்பவத்தை ஏற்படுத்தி ஒரு மணித்தியாலத்தினுள் தானும் தன் உயிரை மாய்த்துக்கொண்டார்.

நஞ்சு மருந்து அருந்தியதால் மரணமடைந்தார் என்று சந்தேகப்பட்டாலும் அவரின் மரணப் பரிசோதனையின்போது இது உறுதியாகவில்லை. அதனால் இவரது மரணம் எவ்வாறு ஏற்பட்டது என்று அறிந்துகொள்ள பகுப்பாய்வாளரின் உதவியை நாடியுள்ளார்கள்.

பத்மநாதன் எனும் அவர் அத்தோட்டத்திலேயே வசிக்கும் திருமணமான 2 பிள்ளைகளின் தந்தையாவார். அவர் தோட்டத் தொழிலாளியாக வேலை செய்வதுடன் தொழிற்சங்கக் பிரதிநிதியாகவும் உள்ளார்.

இராஜமணியை கொலை செய்து அவரின் மகளுக்கும் பாரிய காயத்தை ஏற்படுத்திவிட்டு தன்னைத் தானே மாய்த்துக்கொண்டதினால் இக்கொலையை மேற்கொண்டதற்கான காரணங்களை சரியான முறையில் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாது விடினும் பொலிசாரால் மேற்கொண்ட விசாரனையின்போது சம்பவத்துடன் தொடர்புபட்ட சில விடயங்களை அறிந்து கொள்ள முடிந்துள்ளது.

பத்மநாதன் எல்லோர் மத்தியிலும் மிகவும் நன்மதிப்பைப் பெற்றவராவர். சாதாரண தோட்டத் தொழிலாளரின் பழக்க வழக்கம் அவரிடமும் இருந்தது தினமும் தனது கடமை நேரம் முடிந்ததும் மது அருந்துவதற்கு பழக்கப்பட்டிருந்தார். ஆனால் தனது மனைவி, பிள்ளைகள் மீது மிகவும் அன்பாக இருந்தார். தனது மனைவியை உயிருக்குயிராக நேசித்தவர் தனது மனைவி வேறு ஒருவரை சும்மாதன்னும் பார்ப்பதைக்கூட அவர் விரும்பவில்லை. ஆனால் தனது மனைவியின் அன்பை தன்மீது மட்டும் ஈர்த்துக் கொள்ள அவரால் முடியவில்லை. தனது மனைவி வேறு ஒருவருடன் தொடர்பு வைத்துள்ளதாக பத்மநாதனுக்கு தெரியவந்தது. அவர் தன் நண்பர்கள் மூலம் இது தொடர்பாக பல தகவல்கள் கிடைத்தது.

இதுபற்றி மிகவும் உன்னிப்பாக கவனித்து வந்த பத்மநாதன் தனது மனைவியின் கள்ளத் தொடர்பிற்கு உதவி புரிகின்றவர்கள் யார் என்று அறிய முற்பட்டார். அதன்போது தேயிலை தோட்டத்தில் வசிக்கும் ராஜமணி எனும் பெண் தனது மனைவியின் தகாத உறவிற்கு உதவி புரிகின்றார் என்று அறிந்துகொண்டார்.

ராஜமணி மூன்று பிள்ளைகளின் தாயாவார். அவரும் லியன்வள தோட்டத்தில் தொழில-ாளியாவார். அவரது கணவன் சில மாதங்களுக்கு முன் இறந்து விட்டார். மூத்த மகளான மஞ்சு அவரது இரண்டு பிள்ளைகள் மற்றும் கணவனுடன் இராஜமணியின் வீட்டிலேயே வசித்து வந்தனர்.

பத்மநாதனின் மனைவி இராஜமணியின் நெருங்கிய தோழியாவர் தனது நண்பியின் நடத்தை தவறாக இருப்பினும் நண்பி எனும் வகையில் அவளின் கள்ளத் தொடர்பிற்கு உதவி புரிய வேண்டிய நிலை இராஜமணிக்கு ஏற்பட்டது. இக்கள்ளத் தொடர்பு காரணமாக பத்மநாதன் மிகவும் கோபமடைந்தார், வேதனைப்பட்டார். ஆனால் மனைவியுடன் இது தொடர்பாக சண்டை சச்சரவில் ஈடுபடவில்லை. அவரின் முழுக் கோபமும் இராஜமணி மீதே இருந்தது.

கடந்த மாதம் 25ம் திகதி இரவு வழமைபோல மது அருந்துவதற்காக பத்மநாதன் சென்றார். வழமையை விடக் கூடுதலாக மது அருந்தினார். தனது மனைவியின் தகாத உறவு தொடர்பாக பல எண்ணங்கள் மனதில் தோன்றியது. அவர் மனம் இராஜமணிமீது ஆத்திரம் கொண்டது. காரணம் தனது மனைவியின் தகாத உறவிற்கு உதவி புரிவதாலாகும்.

தேயிலை மரம் வெட்டுவதற்காக தோட்டத்தினால் வழங்கப்பட்ட கே.பி. (கருப்பையா பத்மநாதன்) என்று எழுத்து பொ-றிக்கப்பட்ட கத்தியையே இடுப்பில் செருகியபடி இராஜமணியின் வீட்டை நோக்கிப் போனார்.

நேரம் இரவு ஏழுமணிக்கும் எட்டு மணிக்கு இடையில் இராஜமணி, மகள் மஞ்சு (வயது 30) அவளின் 2 பிள்ளைகளுடன் வீட்டில் இருந்தார்கள். இராஜமணியின் வீட்டிற்குள் நுழைந்த பத்மநாதன் இடுப்பில் செருகி வைத்திருந்த கத்தியை உருவி இராஜமணியை தாறுமாறாக வெட்டத் தொடங்கினார். மஞ்சு தனது தாயாரைக் காப்பாற்றுவதற்கு முயற்சித்தார். அப்போது அவரும் கத்தி வெட்டுக்குள்ளானார். கடும் காயமடைந்த மஞ்சு அந்த இடத்தைவிட்டு விலக தன்னை தானே காப்பாற்றிக் கொள்ள இராஜமணி வெளியே ஓடத் தொடங்கினார். ஆனால் அவனால் நீண்டதூரம் ஓடமுடியவில்லை. இரண்டு வீடுகளைத் தாண்டி மூன்றாவது வீட்டினுள் குசினிக்குள் நுழைந்தார். ஆனால் பத்மநாதன் துரத்திச்சென்று மீண்டும் வெட்டத் தொடங்கினான். வெட்டியபின் கத்தியை அவ்விடத்தில் விட்டு விலகிவிட்டார். இராஜமணி உற்பட குடும்பத்தவரின் அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தவர் அவ்விடத்திற்கு ஓடோடி வந்தார்கள். உடனடியாக இராஜமணியையும் மகள் மஞ்சுவை ஹைகொறங் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றார்கள். ஆனால் இராஜமணி இறந்து விட்டார்.

இராகன பொலிசாருக்கு இத் தகவல் அனாமதேய தொலைபேசி அழைப்பு மூலம் தெரியவந்தது. அதன் பின்பு பொலிஸ் நிலையம் வந்த இராஜமணியின் உறவினர் மூலம் சம்பவம் பற்றி பொலிஸ் பதிவேட்டில் பதியப்பட்டது.


பொலிசார் முதலாவதாக வைத்தியசாலைக்கு விரைந்தார்கள். இராஜமணி இறந்திருந்தார் மஞ்சு கடும் காயத்துடன் வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தார். பின்பு சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்ற பொலிசார் கொலைக்காக பயன்படுத்திய தேயிலை செடிகளை வெட்டும் கத்தியை தேடி எடுத்தார்கள்.

இராஜமணி மகளின் 10 வயது நிரம்பிய மகள் பொலிசாருக்கு தான் கண்ணால் கண்டதை கூறினார். பத்மநாதன் மாமா வீட்டுக்குள் வந்து தனது தாயாரையும் பாட்டியையும் கத்தியால் வெட்டியதாக கூறியிருந்தார்.

சந்தேக நபரான பத்மநாதனை தேடும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிசாருக்கு பிரதேச மக்களிடம் இருந்து தகவல் ஒன்று எட்டியது. "நபர் ஒருவர் வீதியில் விழுந்து இருக்கின்றார்" என்ற தகவலை அடுத்து அவ்விடத்திற்கு பொலிசார் சென்றபோது அந்நபரை சுற்றி சனக்கூட்டம் காணப்பட்டது. அந்த நபர் வேறுயாரும் இல்லை. கொலையாளியான பத்மநாதன்தான்.

பத்மநாதனும் இறந்து இருந்தார். பின்னர் மேற்கொண்டு விசாரணையின்போது அவர் இவ்விடத்திற்கு எப்படி வந்தார் என்ற தகவல் கிடைத்தது. ராஜமணியை கொன்ற பத்மநாதன் ஏதோ ஒரு இடத்தில் நஞ்சு அருந்திவிட்டு இரத்தக் கறை படிந்த சேட்டுடன் முச்சக்கரவண்டியொன்றில் ஏறி பொலிஸ் நிலையம் செல்ல வேண்டும் என்று கூறியுள்ளார். சற்று தூரம் வரும்போது முச்சக்கரவண்டியில் இயந்திர கோளாறு ஏற்பட்டிருக்கின்றது. பத்மநாதனை கீழே இறக்கிவிட்ட சாரதி எப்படியோ வண்டியைக் கொண்டு சென்றுள்ளார். கீழே இறங்கிய பத்மநாதன் இன்னுமொரு முச்சக்கரவண்டி வரும்வரை நின்றுள்ளார். அந்த சமயம் அவ்விடத்திலேயே விழுந்து இறந்துவிட்டார். அவர் அணிந்திருந்த சேர்ட்டில் இரத்தக்கறைகள் இருந்தது. அவரை ஏற்றிவந்த முச்சக்கரவண்டியின் சாரதியிடம் வினவிய போது பத்மநாதன் தனது முச்சக்கரவண்டியில் ஏறும்போது அவரின் சேட்டில் இரத்தக்கறை இருப்பதாகக் கூறியுள்ளார்.

பத்மநாதனின் மனைவி தகாத உறவு வைத்திருப்பின் அவரது காதலனுடன் மோதலில் ஈடுபடவில்லை என்ற சந்தேகம் பொலிசாருக்கு ஏற்பட்டிருப்பதால் விசாரணைகள் தொடர்வதாக இராகன பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கூறினார்.



# நவம்பர் 14 ஆம் திகதி ஐரோப்பாவில் வேலை நிறுத்தப் போராட்டங்கள்

நவம்பர் பதினான்காம் திகதி ஐரோப்பா முழுவதும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செயவதற்கான அறிவிப்பை தொழிற் சங்கங்கள் விடுத்துள்ளன.

ஆரம்பத்தில் கிரேக்கம், சைப்பிரஸ், ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகிய நாடுகளின் தொழிற்சங்கங்களே இந்தப் போராட்டத்தில் ஒன்றிணைந்து அழைப்பு விடுத்தன,

பின்னதாக இந்த அழைப்பு ஐரோப்பா முழுவதுக்குமான அழைப்பாக அமைந்தது. உலகம் முழுவதிலும் இருந்து போராட்டத்திற்கான ஆதரவு பல்வேறு வடிவங்களில் கிடைத்ததாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

திவாலாகும் வங்கிகளுக்கும் பல்தேசிய நிறுவனங்களுக்கும் மக்களிடமிருந்து அறவிடும் வரிப் பணத்தை வழங்குவதற்கு எதிராகவும், வேலை நீக்கங்களுக்கு எதிராகவும், அரசுகளின் சிக்கன நடவடிக்கைகளுக்கு எதிராகவும் இந்தப் போராட்ட அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# சிரியாவில் தற்காலிக யுத்த நிறுத்தத்திற்கு மத்தியிலும் பல பகுதிகளில் மோதல்

## - பரஸ்பரம் குற்றச்சாட்டு

சிரியாவில் ஹஜ்ஜுப் பெருநாளையொட்டி நான்கு நாள் யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்படும் நிலையிலேயும் அங்கு தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. நாட்டில் பல பகுதிகளிலும் அரச படை ஷெல் தாக்குதல் நடத்தி வருவதாக செயற்பாட்டாளர்கள் கூறியுள்ளனர்.

தலைநகர் டமஸ்கஸின் கிழக்கு நகரான டயர் எஸ்ஸோர் மற்றும் கிளர்ச்சியாளர் கட்டுப்பாட்டில் இருக்கும் வடக்கு அலப்போ மாகாணங்களில் ஷெல் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. ஐ.நா. தலையீட்டில் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் சிரியாவில் யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்படுகிறது.

ஆனால் அன்றைய தினமே பல பகுதிகளிலும் மோதல்கள் பதிவாயின. யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்ட முதல் தினத்திலேயே சுமார் 150 பேர் பலியானதாக செயற்பாட்டாளர்கள் தகவல் அளித்துள்ளனர்.

யுத்த நிறுத்தத்திற்கு முன்னரும் தற்போதும் எந்த வித்தியாசத்தையும் காண முடியவில்லை என்றும் அவர் கூறினார். சிரிய மோதல்கள் குறித்து கண்காணித்துவரும் பிரதான அமைப்பான பிரிட்டனை மையமாகக் கொண்டு செயற்படும் மனித உரிமை அமைப்பு, சனிக்கிழமை நடந்த மோதல்களில் மொத்தம் 8 பேர் கொல்லப்பட்டதாக கூறியுள்ளது. அதே போன்று கிளர்ச்சியாளர்களை இலக்கு வைத்து அரச படையின் விமானங்களும் அலப்போவினூடாக பறந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

சிரியாவுக்கான ஐ. நா. மற்றும் அரபு லீக்கின் விசேட தூதுவர் லக்தர் பிராஹிமியின் முயற்சியால் தற்காலிக யுத்த நிறுத்தம் ஏற்பட்டது. இதன் மூலம் சிரியாவில் நிரந்தர அமைதி பேச்சுவார்த்தைக்கு வழி ஏற்பட்டிருப்பதாக அவர் நம்பிக்கை தெரிவித்திருந்தார். ஆனால் எதிர்த் தரப்பு தாக்குதல் நடத்தும் வரையே தாம் யுத்த நிறுத்தத்தை கடைபிடிப்பதாக அரசு மற்றும் கிளர்ச்சியாளர்கள் நிபந்தனை விதித்திருந்தனர்.

இந்நிலையில் இந்த யுத்த நிறுத்தம் ஆரம்பிக்கும் முன்னரே தோல்வி அடைந்துவிட்டதாக கிளர்ச்சியாளர்களின் சிரிய சுயாதீனப் படை கூறியுள்ளது. மறு புறத்தில் தாம் தற்பாதுகாப்பிற்கான தாக்குதலையே நடத்துவதாக அரசு கூறியுள்ளது.

தமது படைகள் மூலம் இந்த யுத்தத்தில் வெல்லமுடியும் என இரு தரப்பினரும் இன்று வரை உறுதியாக நம்பி வருகின்றனர். அரச படை ரஷ்யாவின் ஆதரவுடன் கனரக ஆயுதங்களை கொண்டு கிளர்ச்சியாளர்களை முடக்க எதிர்பார்த்துள்ளது. மறுபுறத்தில் கிளர்ச்சியாளர்கள் மக்கள் ஆதரவுடன் இந்த யுத்தத்தை வெல்ல முயற்சித்து வருகிறது.

சிரியாவில் ஓர் ஆண்டுக்கும் மேலாக தொடரும் மோதலில் இது வரை 35,000 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதாக செயற்பாட்டாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந் நிலையில் ஐ. நா. வும் அரபு லீக்கும் சிரியாவில் யுத்த நிறுத்தத்தை கொண்டுவர பலமுறை முயற்சித்த போதும் அவை தோல்வியிலேயே முடிந்தன.

# மியன்மார் கலவரத்தில் 22 ஆயிரம் பேர் வீடிழப்பு



மியான்மர் நாட்டில், ரகின் மாகாணத்தில் கலவரம் நீடிப்பதால், 22 ஆயிரம் பேர் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர். மியான்மார் நாட்டில், வங்கதேச எல்லையை ஒட்டி அமைந்துள்ள, ரகின் மாகாணத்தில், ஜூன் மாதம் முஸ்லிம்களுக்கும், புத்த மதத்தினருக்கும் இடையே கலவரம் மூண்டது.

ரகின் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களில், வங்கதேசத்திலிருந்து குடிபெயர்ந்த, 8 லட்சம் முஸ்லிம்கள் வசிக்கின்றனர். இவர்கள், மியான்மரில் குடியுரிமை கேட்டு, போராடி வருகின்றனர். சட்ட விரோதமாக குடிபெயர்ந்தவர்களுக்கு, குடியுரிமை அளிக்க, மியான்மர் அரசு மறுத்து விட்டது. இதற்கிடையே, கடந்த ஜூன் மாதம், முஸ்லிம்களின் குடிசைகளை, தீ வைத்து கொளுத்தி விட்டதாக கூறி, பெரிய அளவில் கலவரம் மூண்டது. இதில் 50 பேர் பலியாயினர். இதையடுத்து, மவுங்தா பகுதியில், அவசர நிலை அறிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு கருதி, ஏராளமான முஸ்லிம்கள், தங்கள் தாயகமான வங்கதேசத்துக்குள் தஞ்சம் அடைந்தனர். இதற்கிடையே, ரகின் மாகாணத்தின், சித்வி நகரில், மீண்டும் பரவியுள்ள வன்முறையால், 4,600 வீடுகள் எரிக்கப்பட்டன. இந்த கலவரத்தில் 80 பேர் பலியாகியுள்ளனர்.

நிலைமையை கட்டுப்படுத்த, தற்போது இங்கு மீண்டும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்பு கருதி, 22 ஆயிரம் பேர், பல்வேறு இடங்களுக்கு சென்று விட்டனர். ஐ.நா., அமைதி குழுவினர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# அமெரிக்காவில் புயலால் பங்கு சந்தைகள் மூடப்பட்டது

அமெரிக்காவில் ஹரிக்கன் புயல் தீவிரமடைந்துள்ளதால் நியுயோர்க் பங்குச் சந்தைகள் நேற்று மூடப்பட்டன. இருப்பினும் பெரிய அளவிலான வர்த்தகங்கள் எலக்ட்ரானிக் இயந்திரங்கள் மூலம் இயங்க உள்ளன. ஹரிக்கன் புயல் காரணமாக பெய்து வரும் கன மழையால் போக்குவரத்தும் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் நியூயார்க் நகரின் பஸ் போக்குவரத்து ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் நிறுத்தப்படுவதாக அந்த மாகாண ஆளுநர் ஆன்ட்ரிவ் குயோமோ தெரிவித்துள்ளார். பள்ளிகளுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இரண்டு நாட்களுக்கு அமெரிக்காவில் இருந்து புறப்படும் சுமார் 3000 உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

# உலக பார்வை

# சீனப் பிரதமர் வென் ஜியாபாப், நியூயோர்க் டைம்ஸ் மீது வழக்கு



சீனப் பிரதமர் வென் ஜியாபாவ், 15 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு சொத்து சேர்த்துள்ள தாக, வெளியாகியுள்ள செய்தியை, அவரது குடும்பத்தினர் மறுத்துள்ளனர். சீனப் பிரதமர் வென் ஜியாபாவ், 10 ஆண்டுகளாக, பதவியில் உள்ளார். அடுத்த மாதம் நடக்கும் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில், இவர் பதவி விலக உள்ளார். இவர், பிரதமர் பதவி ஏற்பதற்கு முன், தன்னிடம் எந்த சொத்தும் கிடையாது, என, கூறியிருந்தார்.

இந்த 10 ஆண்டுகளில், அவர் மனைவி வைர தொழிலில் கொடிக்கட்டி பறக்கிறார். மகன் மற்றும் உறவினர்கள், சுரங்கம் மற்றும் ரியல் எஸ்டேட் தொழிலில் கொழுத்த இலாபம் ஈட்டி வருகின்றனர். இதன் மூலம் வென் ஜியாபாவின் சொத்து மதிப்பு, 15 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக, “நியூயோர்க் டைம்ஸ்” பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.இந்த செய்தியை, வென் ஜியாபாவின் குடும்பத்தினர் மறுத்துள்ளனர். பிரதமரின் புகழை குலைப்பதற்காக இந்தச் செய்தி வெளியிடப்பட்டதாகவும், இதற்காக, அந்த பத்திரிகை மீது மான நஷ்டஈட்டு வழக்கு தொடரப் போவதாகவும், வென்ஜியாபாவ் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

# சுதந்திரதேவி சிலை மீளமைப்பின் பின்னர் திறந்து வைக்கப்பட்டது



அமெரிக்காவில் உள்ள, சுதந்திர தேவிச் சிலை, மராமத்து பணிக்கு பிறகு, தற்போது பொது மக்கள் பார்வைக்கு, மீண்டும் திறக்கப்பட்டு உள்ளது. நியூயோர்க்கில் உள்ள, 126 ஆண்டு கால பழமைவாய்ந்த சுதந்திர தேவி சிலை, சீரமைப்பு பணிக்காக பல மாதங்களாக மூடப்பட்டது. பிரான்ஸ் நாட்டின் சார்பில் அன்பளிப்பாக அளிக்கப்பட்ட இந்தச் சிலைக்குள், 354 படிக்கட்டுகள் இருந்தன் தற்போது இவை, 393 படிக்கட்டுகளாக அதிகரிக்கப்பட்டு உள்ளன. கழிப்பறை வசதி, காற்றோட்ட வசதி போன்றவை அளிக்கப்பட்டுள்ளன. 165 கோடி ரூபாய் செலவில், சீரமைப்புப் பணிகள் நடந்து முடிந்துள்ளதால், பார்வையாளர்கள் அதிக அளவில் வருவார்கள் என, [illegible]திர்பார்க்கப்படுகிறது. சக்கர நாற்காலியின் மூலம், சுதந்திர தேவி சிலையின் கிரீடம் வரை சென்று வர, வசதி செய்யப்பட்டுள்ளது.

# உக்ரைனில் பாராளுமன்ற தேர்தல் நடந்து முடிந்துள்ளது




தேர்தலில் முன்னிலை வகிக்கும் ஆளும் கட்சி அதிபர் விக்ரர் ஜங்கோவிச்.

உக்ரைன் நாட்டில் நேற்று, நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. உக்ரைனில் 450 இடங்களுக்கான, நாடாளுமன்றத் தேர்தல் நேற்று முன்தினம் நடந்தது. 5,000 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். மொத்தமுள்ள 4.5 கோடி வாக்காளர்களில் பெரும்பாலானவர்கள் ஓட்டளித்தனர்.

ஆளும் மண்டலக் கட்சிக்கும், எதிர்கட்சியான பாதர்லேண்ட் கட்சிக்கும் இடையே தான் பலத்த போட்டி நிலவுகிறது. பிரதமராக இருந்த போது அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்திய குற்றத்துக்காக, பாதர்லேண்ட் கட்சியின் பெண் தலைவர் யூலியா திமோ சென்கோவுக்கு ஏழாண்டுச் சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இதனால், அதிபர் விக்டர் யனுக்கோவிச் மீது, பல நாடுகள் அதிருப்தியாக உள்ளன.

பாதர்லேண்ட் கட்சியுடன், பல சிறு கட்சிகள் ஒன்றிணைந்து இந்த தேர்தலில் போட்டியிடுகின்றன. முன்னாள் சோவியத் யூனியனிலிருந்து பிரிந்த உக்ரைனில், தேர்தல் முறைப்படி நடக்கிறதா, என்பதை 3,500 சர்வதேச பார்வையாளர்கள் கண்காணித்து வருகின்றனர்.

# நடிகர் சிரஞ்சீவி உள்பட 22 பேர் மத்திய அமைச்சராக பதவியேற்பு!



மத்திய அமைச்சர்களாக மொத்தம் 22 பேர் இன்று பதவியேற்றுக் கொண்டனர். கேபினட் அமைச்சர்களாக 7 பேரும், சிரஞ்சீவி மற்றும் மணீ திவாரி ஆகியோர் தனி பொறுப்புடன் கூடிய இணை அமைச்சர்களாகவும் சசி தரூர் உள்ளிட்ட 13 பேர் இணை அமைச்சர்களாகவும் பதவியேற்றுக் கொண்டனர். ராஷ்டிரபதி பவனில் இன்று காலை நடந்த விழாவில் அவர்களுக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி பதவி பிரமாணமும் ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.


நாடாளுமன்ற தேர்தல் 2014ம் ஆண்டு நடக்க உள்ளது. இந்த தேர்தலில் சிறப்பாக செயல்பட்டு மீண்டும் ஆட்சியை பிடிக்க பல்வேறு அதிரடி மாற்றங்களில் காங்கிரஸ் கட்சி இறங்கி உள்ளது. அத்தியாவசிய பொருட்கள், பெட்ரோல், டீசல், கேஸ் விலை உயர்வு, அன்னிய நேரடி முதலீடு பிரச்னை, சுரங்க துறை ஊழல் என சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் பல அமைச்சர் பதவிகள் காலியாக உள்ளன. இதனால் சில அமைச்சர்கள் பல பொறுப்புகளை வகித்து வருகின்றனர். அரசு நிர்வாகத்தை திறம்பட நடத்த முடியாத நிலையில், அமைச்சரவையை மாற்றி அமைக்க பிரதமர் மன்மோகன் சிங் முடிவு செய்தார்.

மத்திய அரசுக்கு அளித்து வந்த ஆதரவை மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ் விலக்கி கொண்டதால், அந்த கட்சியை சேர்ந்த 6 அமைச்சர்கள் ராஜினாமா செய்தனர். அறிவியல், தொழில்நுட்ப துறை அமைச்சர் விலாஸ்ராவ் தேஷ்முக் உடல் நலக் குறைவு காரணமாக இறந்தார். தகவல் ஒலிபரப்பு துறை அமைச்சர் பிரியரஞ்சன் தாஸ் முன்ஷியும் உடல்நலக் குறைவால் அமைச்சரவையில் இருந்து விலகினார். திமுகவை சேர்ந்த 2 அமைச்சர்கள் ஏற்கனவே ராஜினாமா செய்துள்ளனர்.

இந்த இடங்களில் புதிய அமைச்சர்களை நியமிக்க காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியுடன், மன்மோகன் சிங் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வந்தார். இந்நிலையில் அமைச்சரவை இன்று மாற்றி அமைக்கப்பட்டது.

# இந்திய செய்திகள்

## அமைச்சர்கள் பற்றி விமர்சனம்: கருணாநிதி மீது அவதூறு வழக்கு



சென்னை முதன்மை செசன்சு கோர்ட்டில் அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் சார்பில் அரசு வக்கீல் எம்.எல். ஜெகன் ஒரு மனுதாக்கல் செய்தார். அதில் கூறி இருப்பதாவது:


கடந்த ஆகஸ்டு 22-ந் தேதி வெளியான ஒரு வார பத்திரிகையில் தமிழக அமைச்சர்களின் செயல்பாடுகள் குறித்து செய்தி வெளியாகியுள்ளது. இந்த செய்தியை மேற் கோள் காட்டி முரசொலி பத்திரிகையில் கேள்வி-பதில் பகுதியில் தி.மு.க. தலைவர் கருணாநிதி கருத்து தெரிவித்திருந்தார். வார பத்திரிகை மற்றும் முரசொலி பத்திரிகையில் வந்த செய்தி அவதூறானது. உண்மைக்கு புறம்பானது.

தமிழக அரசுக்கும் அமைச்சர்களுக்கும் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் உள்ளது. எனவே தி.மு.க. தலைவர் கருணாநிதி, முரசொலி செல்வம், வாரப்பத்திரிகை ஆசிரியர், பதிப்பாளர், வெளியீட்டாளர், செய்தியாளர் ஆகியோரை கிரிமினல் அவதூறு சட்டத்தின் கீழ் தண்டிக்க வேண்டும்.



மன்மோகன்சிங் புதிதாக அமைத்திருக்கும் அமைச்சரவையுடன் இங்கு காணப்படுகிறார்.

# அரசுப் பதவியை விட கட்சிப் பதவிக்கே ராகுல் ஆர்வம்



காங்., பொதுச் செயலர் ராகுலை, கட்சியின் செயல் தலைவராக நியமிக்க, கட்சி மேலிடம் முடிவு செய்துள்ளது. இதன் காரணமாகவே, அவருக்கு அமைச்சர் பதவி தரப்படவில்லை என, தகவல் வெளியாகியுள்ளது.

லோக்சபா தேர்தல், 2014ல் நடக்கவுள்ளது. இதையடுத்து, ஆட்சியை தக்க வைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளில், காங்கிரஸ் மேலிடம் தீவிரம் காட்டி வருகிறது. இதற்காக, மத்திய அமைச்சரவையிலும்,கட்சியிலும், முக்கிய மாற்றங்களை மேற்கொள்ள, மேலிடம் திட்டமிட்டது.

அமைச்சரவை மாற்றத்தில், காங்.பொதுச் செயலர் ராகுலுக்கு முக்கிய இலாகாக்கள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதுபோல் எதுவும் நடக்கவில்லை. இதனால், காங்கிரஸ் கட்சியில் உள்ள, ராகுல் விசுவாசிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

அரசுப் பதவியை விட, கட்சிப் பதவியை வகிப்பதற்கே, ராகுல் ஆர்வமாக உள்ளார். நாடு முழுவதும் கட்சியை பலப்படுத்த வேண்டும் என்பது, அவரது திட்டம். அமைச்சர் பதவி, இதற்கு இடையூறாக இருக்கும் என்று, அவர் கருதுகிறார்.இதனால் தான், பிரதமர் மன்மோகன் சிங், திக்விஜய் சிங் உள்ளிட்ட, மூத்த தலைவர்கள் வற்புறுத்தியும், அமைச்சர் பதவியை ஏற்பதற்கு, அவர் தயக்கம் காட்டி வந்தார். தான், அமைச்சரானால், இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த பலரும், அமைச்சர் பதவிக்கு ஆசைப்படுவர் என்பதால், கட்சிப் பணிகளில் தொய்வு ஏற்படும் என்றும், இதனால், தேர்தலின் போது, காங்கிரசுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதும், ராகுலின் கணிப்பு.

அமைச்சர் பதவியை, அவர் ஏற்க மறுப்பதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். ராகுலின் இந்த விருப்பத்தை உணர்ந்துள்ள கட்சி மேலிடம், அவருக்கு கட்சியில் முக்கிய பதவியை கொடுக்க, முடிவு செய்துள்ளது. இதன்படி, காங்கிரஸ் கட்சியின் செயல் தலைவர் என்ற, மிக முக்கியமான பதவி, அவருக்கு அளிக்கப்படும் என, தெரிகிறது.

## கூடங்குளம் அணு உலையை எதிர்த்து கோட்டையை நோக்கிப் பேரணி

கூடங்குளம் அணுஉலையை மூட வலியுறுத்தி, கோட்டையை முற்றுகையிட சென்ற அணுஉலை எதிர்ப்பாளர்கள் கைது செய்யப்பட்டனர். சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே அவர்களை பொலிசார் கைது செய்தனர். கூடங்குளம் அணு உலையை மூட வலியுறுத்தி பல்வேறு அமைப்பினர் போராட்டத்தில் கலந்து கொண்டனர். ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ, பழ.நெடுமாறன், திருமாவளவன், தியாகு தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது.

# சிறப்பு காவல் இளைஞர் படை: தமிழக முதல்வர் அறிவிப்பு



"சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும் குற்றங்களை தடுக்கவும், தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர் படை என்ற பெயரில் புதிதாக சிறப்பு படை அமைக்கப்படும். இதற்காக 10 ஆயிரம் பேர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்" என்று சட்டசபையில் நேற்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். சட்டசபை இன்று கூடியதும் பேரவை விதி 110ன் கீழ் முதல்வர் ஜெயலலிதா அறிக்கை ஒன்றை வாசித்தார். அதில் அவர் கூறியதாவது:

சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, குற்ற நிகழ்வுகள் கண்டுபிடிப்பு, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, போக்குவரத்தை சீர்படுத்துவது, மீட்பு பணி, விழா காலங்களில் கூட்ட நெரிசலை முறைப்படுத்துவது என பல்வேறு பணிகளை தமிழக காவல்துறை ஆற்றி வருகிறது. இத்துறையில் உள்ள மொத்த பணியிடங்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 13,629. இது, 635 மக்களுக்கு ஒரு காவல் அலுவலர் என்ற விகிதாச்சாரத்தில் உள்ளது. இந்த பற்றாக்குறையை சீர் செய்ய, காலியாக உள்ள 12,208 காவலர் பணியிடங்களை தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்ப உத்தரவிட்டேன்.

துணை படை அமைப்பதன் மூலம் சட்டம் ஒழுங்கு பராமரித்தல், குற்றங்களை கட்டுப்படுத்துதல், குற்ற புலனாய்வு போன்ற காவல் பணிகளில் தற்போதுள்ள காவலர்களை முழுமையாக ஈடுபடுத்த இயலும். இதற்கு வழி செய்யும் வகையில், "தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர் படை" என்ற ஒரு சிறப்பு படை உருவாக்கப்படும். இந்த படையில் உறுப்பினர் சேர்ப்புக்கு விளம்பரம் செய்யப்படும். மாவட்ட வாரியாக காவல் கண்காணிப்பாளர்கள் மூலம் தேர்வு நடத்தப்படும். பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று 18 வயது முதல் 30 வயது வரை உள்ள இளைஞர்கள் தேர்வில் பங்கேற்கலாம். வெற்றி பெறுபவர்கள் அந்தந்த மாவட்டங்களில் காவல் இளைஞர் படை உறுப்பினர்களாக பணி அமர்த்தப்படுவர்.

இவ்வாறு ஜெயலலிதா தெரிவித்தார்.

## கோவிலில் சில்மிஷம்; கன்னத்தில் அறைந்தார் பொலிஸ் இன்ஸ்பெக்டர்

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. தரிசனத்துக்காக பக்தர்கள் 20 மணி நேரம் காத்து நின்றனர். லுங்கேஸ் பெண் இன்ஸ்பெக்டர் அபர்னா முன்பு திருமலையில் போக்குவரத்து இன்ஸ்பெக்டராக பணியாற்றினார்.

இவர் தனது கணவருடன் நேற்று சாதாரண உடையில் திருப்பதி கோவிலுக்கு சாமி கும்பிட வந்தார். வி.ஐ.பி. தரிசனத்துக்கான அனுமதி பெற்று இருந்தார். ஜெயன், விஜயன் சிலைகள் உள்ள வாசலை கடந்தபோது அங்கு நின்ற கோவில் மேற்பார்வையாளர் நரேந்திரா அவரிடம் ஆபாசமாக நடந்து கொண்டார். இதனால் ஆத்திரம் அடைந்த அபர்னா அவரை கன்னத்தில் பளார் என அறைந்தார்.

இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. நரேந்திராவுக்கு ஆதரவாக கோவில் இன்ஸ்பெக்டர் பாலாஜி, ஆடிட்டர் கணேசன் ஆகியோர் வந்து அபர்னாவிடம் சில்மிஷம் செய்தபடி தகராறு செய்தனர். அவர்களையும் அபர்ணா கன்னத்தில் அறைந்தார். இதனால் அங்கு பெரும் கலாட்டா ஏற்பட்டது. இது குறித்து இன்ஸ்பெக்டர் அபர்னா தேவஸ்தான பாதுகாப்பு அதிகாரி அசோக் குமாரிடம் புகார் செய்தார்.

அவர் இரு தரப்பினரிடம் விசாரணை நடத்தினார். கமராவில் பதிவான காட்சியை பார்த்து நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்.

இருந்தாலும் கோவில் சன்னிதானத்தில் தரிசனத்துக்கு வந்த நேரத்தில் ஒருவர் மீது புகார் கொடுக்க மனமில்லாமல் தனது புகாரை அபர்னா பின்னர் வாபஸ் பெற்றுக் கொண்டார்.

# சம்பியன்ஸ் லீக் சம்பியன்களாக சிட்னி சிக்ஸர்ஸ்

இடம்பெற்றுவந்த சம்பியன்ஸ் லீக் டுவெண்டி ருவெண்டி தொடரின் சம்பியன்களாக அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த சிட்னி சிக்ஸர்ஸ் அணி தெரிவாகியுள்ளது.

இறுதிப் போட்டியில் தென்னாபிரிக்காவின் ஹைவெல்ட் லயன்ஸ் அணியை இலகுவாகத் தோற்கடித்தே சிட்னி சிக்ஸர்ஸ் அணி சம்பியன் பட்டம் வென்றது.

நியூ வன்டரர்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிட்னி சிக்ஸர்ஸ் அணியின் தலைவர் பிரட் ஹடின் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைவெல்ட் லயன்ஸ் அணி 20 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 121 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

மிக மோசமான ஆரம்பமாக 4 விக்கெட்டுக்களை இழந்து 9 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிய அவ்வணி, அதன் பின்னர் 7 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 32 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியது.

தொடர்ந்து வந்த வீரர்கள் சமாளித்த ஆட முயன்ற போதிலும், சிட்னி சிக்ஸர்ஸ் அணியின் சிறப்பான பந்துவீச்சுக் காரணமாக ஹைவெல்ட் லயன்ஸ் அணி போதியளவு ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ளத் தவறியிருந்தது.

துடுப்பாட்டத்தில் ஹைவெல்ட் லயன்ஸ் அணி சார்பாக ஜீன் சைம்ஸ் 46 பந்துகளில் 51 ஓட்டங்களையும், டுவைன் பிறீரோறியஸ் 13 பந்துகளில் 21 ஓட்டங்களையும், தமி சொலக்கிலே 19 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் சிட்னி சிக்ஸர்ஸ் அணி சார்பாக ஜோ' ஹே'ல்வூட் 4 ஓவர்களில் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் நேதன் மக்கலம் 4 ஓவர்களில் 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் ஸ்டீவன் ஓ்ஃப் கீ 4 ஓவர்களில் 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் மிற்சல் ஸ்ரார்க் 4 ஓவர்களில் 36 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

122 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய சிட்னி சிக்ஸர்ஸ் அணி 12.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்திருந்தது.

ஆரம்பத்தில் சற்று மெதுவான ஆட்டத்தை வெளிப்படுத்திய சிட்னி சிக்ஸர்ஸ் அணி அதன் பின்னர் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திப் போட்டியில் வெற்றி பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் சிட்னி சிக்ஸர்ஸ் அணி சார்பாக மைக்கல் லம்ப் 42 பந்துகளில் ஆட்டமிழக்



காமல் 82 ஓட்டங்களையும் பிரட் ஹடின் 33 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். இப்போட்டியின் நாயகனாக சிட்னி சிக்ஸர்ஸ் அணியின் மைக் கல் லம்ப் தெரிவான அதே வேளை, போட்டித் தொடரின் நாயகனாக சிட்னி சிக்ஸர்ஸ் அணியின் மிற்சல் ஸ்ரார்க் தெரிவானார்.

# ஹொங்கொங் சிக்ஸர்ஸ் சம்பியன் பட்டத்தை வென்றது தென்னாபிரிக்கா

ஹொங் கொங்கில் நேற்றும், இன்றும் இடம்பெற்ற ஹொங் கொங் சிக்ஸர்ஸ் தொடரின் சம்பியன்களாக தென்னாபிரிக்க அணி தெரிவாகியுள்ளது.

இறுதிப் போட்டியில் அவ்வணி பாகிஸ்தான் அணியை இலகுவாகத் தோற்கடித்திருந்தது.

6 பேர் கொண்ட 5 ஓவர்கள் கொண்ட போட்டிகளாக இடம்பெற்ற இப்போட்டிகளின் இறுதிப் போட்டி மாத்திரம் 8 பந்துகள் கொண்ட 5 ஓவர்களாக இடம்பெற்றது. ஏனைய போட்டிகள் 6 பந்துகள் கொண்ட 5 ஓவர்களாக அமைந்திருந்தன.

அவுஸ்ரேலிய, தென்னாபிரிக்க, இங்கிலாந்து, பாகிஸ்தான், இலங்கை, இந்திய, நெதர்லாந்து அணிகள் பங்குபற்றியிருந்தன.

முதலில் இவ்வணிகள் 4 அணிகள் கொண்ட 2 குழுக்களாகப் பிரிக்கப்பட்டுப் போட்டிகள் இடம்பெற்றதோடு, அதன் பின்னர் ஒவ்வொரு குழுவிலிருந்தும் முதலிரண்டு அணிகளும் தெரிவுசெய்து அடுத்த சுற்றுக்குத் தெரிவாகின.

அடுத்த சுற்றில் அவ்வணிகள் தமக்குள் போட்டிகளில் பங்குபற்றி, அதில் முதலிரண்டு இடங்களைப் பெற்ற அணிகள் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றன.



அவுஸ்ரேலிய, தென்னாபிரிக்க, இங்கிலாந்து, ஹொங் கொங் அணிகள் கொண்ட குழு "ஏ" இலிருந்து ஹொங் கொங், தென்னாபிரிக்க அணிகளும், பாகிஸ்தான், இலங்கை, இந்திய, நெதர்லாந்து அணிகள் குழு "பி" இலிருந்து இலங்கை, பாகிஸ்தான் அணிகளும் அடுத்த சுற்றிற்குத் தகுதிபெற்றிருந்தன.

இதில் இலங்கை அணி தான் பங்குபற்றிய 3 பாட்டிகளிலும் வெற்றிபெற்றிருந்ததோடு, பாகிஸ்தான், ஹொங் கொங், தென்னாபிரிக்க அணிகள் தலா 2 போட்டிகளில் வெற்றிபெற்றிருந்தன.

எனினும் அடுத்த சுற்றுப் போட்டிகளில் தென்னாபிரிக்க அணி 3 போட்டிகளிலும், பாகிஸ்தான் அணி 2 போட்டிகளிலும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றன.

ஹொங் கொங் அணி ஒரு போட்டியில் வெற்றிபெற்றுக் கொண்ட அதேவேளை, இலங்கை அணி 3 போட்டிகளிலும் தோல்வியடைந்திருந்தது.

இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணி நாணயச்சுழற் சியில் வெற்றிபெற்று முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித் திருந்தது.

தென்னாபிரிக்க அணி 5 ஓவர்களில் 142 ஓட்டங்களைக் குவிக்க, பாகிஸ்தான் அணி 4.1 ஓவர்களில் 105 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 37 ஓட்டங்களால் தோல்வியடைந்திருந்தது.

# தென்னாபிரிக்காவிற்கெதிரானஅஸி. டெஸ்ற் அணி அறிவிப்பு

அவுஸ்திரேலியாவிற்கு கிரிககெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள தென்னாபிரிக்க அணிக்கெதிரான டெஸ்ற் தொடரின் முதலாவது போட்டிக்கான அவுஸ்திரேலிய டெஸ்ற் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

12 பேர் கொண்ட அணியே அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க அணி அவுஸ்திரேலியாவிற்குப் பயணம் செய்து 3 டெஸ்ற் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது.

இதில் முதலாவது டெஸ்ற் போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

முதலாவது டெஸ்ற் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணியே அறிவிக்கப்பட்டுள்ளது.

மைக்கல் கிளார்க் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள அணி ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட அணியாகவே அமைந்துள்ளது.

இதில் குறிப்பிடத்தக்க தெரிவாக விக்கெட் காப்பாளரான பிரட் ஹடினை முந்திக் கொண்டு மத்தியூ வேட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். வழங்கப்பட்ட வாய்ப்புக்களில் அவர் சிறப்பாகப் பிரகாசித்ததை யடுத்தே அவருக்கு டெஸ்ற் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.


மத்தியூ வேட் அணியில் தெரிவுசெய்யப்பட்டுள்ள போதிலும், பிரட் ஹடின் இன்ன மும் அவுஸ்திரேலிய அணியின் தெரிவுக்கான வாய்ப்புக்கள் கொண்ட வீரராக காணப்படுகிறார் என அவுஸ்திரேலிய பிரதம தேர்வாளர் ஜோன் இன்வெராரிற்றி தெரிவித்துள்ளார்.

மத்தியூ வேட் இன் தெரிவைத் தவிர, இளம் வேகப்பந்து வீச்சாளர் பற் கமின்ஸ் முதலாவது போட்டிக்கான அணியில் சேர்க்கப்படவில்லை. காயத்திலிருந்து குணமடைந்த பின்னர் அவர் முதற்தர போட்டிகளில் பங்குபற்றியிருக்காத நிலையிலேயே அவர் அணியில் சேர்க்கப்படவில்லை.

அணி:மைக்கல் கிளார்க், [illegible] வோ ணர், எட் கோவன், ேன் [illegible]சன், றிக்கி பொன்டிங், மைக்கல் ஹசி, மத்தியூ வேட், பீற்றர் சிடில், ஜேம்ஸ் பற்றின்சன், பென் ஹில் பன்ஹோஸ், மிற்சல் ஸ்ரார்க், நேதன் லயன்.

# பிரெஞ்ச் ஓபன் கிண்ணத்தை கைப்பற்றினார் மினட்சு: சாய்னா தோல்வி







பிரெஞ்ச் ஓபன் பேட்மின்டன் தொடரின் இறுதிச்சுற்றில் தோல்வியடைந்த இந்திய வீராங்கனை சாய்னா நெஹ்வால் இரண்டாவது இடம் பிடித்தார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில், பிரெஞ்ச் ஓபன் பேட்மின்டன் தொடர் நடைபெற்றது.

இதன் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் இந்தியாவின் சாய்னா நெஹ்வால், ஜப்பானின் மினட்சு மிடானியை சந்தித்தார்.

இதன் முதல் செட்டை 21-19 என்று போராடி வென்ற மினட்சு, இரண்டாவது செட்டை 21-11 என்று எளிதில் வென்றார்.

சுமார் 39 நிமிடங்கள் நீடித்த இப்போட்டியின் முடிவில் மினட்சு 21-19, 21-11 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் கிண்ணத்தை கைப்பற்றினார்.

தோல்வியடைந்த சாய்னா இரண்டாவது இடம் பிடித்தார்.

சமீபத்தில் முடிந்த டென்மார்க் ஓபன் சூப்பர் சீரிஸ் பேட்மின்டன் தொடரில் முன்னணி வீராங்கனைகளை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்ற சாய்னா, பிரெஞ்ச் ஓபனில் சுலபமாக பட்டம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 30.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது